வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433 076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 04 29.07.2023 சனிக்கிழமை இதழ் : 231 பக்கங்கள் : 16

மனிதப் புதைகுழி விவகாரம்:

# நீதி கோரி முல்லையில் திரண்டனர் தமிழர்கள்!



முல்லைத்தீவு, ஜூலை 29

**கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரியும் - சர்வதேச கண்காணிப்பை வலியுறுத்தியும் முல்லைத்தீவில் நேற்று பேரணி முன்னெடுக்கப்பட்டது.**

இறுதிப் போர் சமயத்தில் அதிகமானவர்கள் இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட இடத்தில் - தற்போது முல்லைத்தீவு நீதிமன்றம் அமைந்துள்ள இடமருகே பேரணி ஆரம்பமானது.

அங்கிருந்து நகர்ந்த பேரணி நீதிமன்றத்துக்கு முன்பாக சென்று மாங்குளம் - முல்லைத்தீவு வீதி ஊடாக மாவட்ட செயலகத்தை சென்றடைந்தது. அங்கு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பிரகடன அறிக்கையும் விடுக்கப்பட்டது.

பேரணியிலும் 15



# வடக்கில் முழுமையாக இயல்புநிலை பாதிப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 29

மனிதப் புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரியும் சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும் வடக்கு, கிழக்கில் நேற்று பொது முடக்கம் கடைப்பிடிக்கப்பட்டது. இதனால், வடக்கில் முழுமையாக இயல்புநிலை பாதிக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் விடுத்த அழைப்பின் பேரில் இந்தப் பொது முடக்கம் கடைப் பிடிக்கப்பட்டது. அரசியல் கட்சிகள், பல்கலைக்கழகங் களின் மாணவர் அமைப்புகள், 15

## இலங்கையின் நீதித்துறை கேள்விக்குறியே!

சிறீதரன் எம். பி.

முல்லைத்தீவு, ஜூலை 29

தமிழ் நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினால் பிழை எனக் கூறும் அரசியல் தலைவர்கள் இருக்கும்வரை நாட்டின் நீதித் துறை கேள்விக்குறியே 15

## சர்வதேசத்தின் நேரடி தலையீடே நாம் வேண்டுவது

ரவிகரன்

முல்லைத்தீவு, ஜூலை 29

அரசாங்கத்தின் தமிழர்கள் மீதான அடக்குமுறை மற்றும், இன அழிப்புச் செயல்பாடுகளுக்கு எதிராக நியாயமான தீர்வை வழங்க சர்வதேசம் 15

## சர்வதேச கண்காணிப்பில் புதைகுழிகளை தோண்டுக!

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள்

முல்லைத்தீவு,ஜூலை 29

தமிழர் தாயகத்தில் இனங்காணப்பட்டுள்ள மனிதப் புதைகுழிகள் சர்வதேச நிபுணத்துவத்துடனும் - கண்காணிப்புடனும் அகழப்படவேண்டும் - இவ்வாறு வட, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினர் வலியுறுத்தியுள்ளனர்.

நேற்றையதினம் 15

## காலதாமதம் இனியும் வேண்டாம்!

த. தே. ம. மு.

முல்லைத்தீவு,ஜூலை 29

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரம் தொடர்பில் சர்வதேச தராதரங்களுக்கு அமைவாக சர்வதேசத்தின் நிபுணத்துவத் 15

## மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கக்கூடாது!

சிறீ லங்கா சுதந்திர கட்சி

கொழும்பு, ஜூலை 29

மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவதில் எமக்கு உடன்பாடில்லை. மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டால் அது, தென்னிலங்கையில் ஏற்படுத்தும் தாக்கத்தால் மக்கள் மத்தியில் மீண்டும் மோதல்கள் ஏற்பட வழிவகுக்கும் என்று சிறிலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். 15

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி:

## அகழ்வுக்கு நிதி ஒதுக்குவதாக ஜனாதிபதி உறுதியளித்தார்!

விக்னேஸ்வரன் எம். பி. தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 29

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் அகழ்வுப் பணிக்கு நிதி ஒதுக்குவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தாரென தமிழ் மக்கள் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார். 15



## பொரளை போராட்டத்தில் கண்ணீர்புகை, நீர்த்தாரை!

கொழும்பு, ஜூலை 29

பொரளையில் ஒன்றிணைந்த தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் ஏற்பாட்டில் நடக்கும் பொதுமக்கள் போராட்டத்தில் பங்கேற்றவர்களை கலைக்க பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர் புகை குண்டுகள் பிரயோகித்தனர்.

மருதானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டீன்ஸ் வீதி, கின்சி வீதி மற்றும் தேசிய மருத்துவமனை சதுக்கத்துக்கு அண்மித்த வீதிகள் உட்பட பல பகுதிகளில் பொதுமக்கள் மற்றும் வாகன சாரதிகளுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் நேற்று காலை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முன்னதாக பல தொழிற்சங்கங்களுக்கு போராட்டத்துக்கு தடைவிதித்து மாளிகாகந்தை நீதிவான் உத்தரவு பிறப்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஓ. எல். மாணவர்களுக்கான

## செயன்முறை பரீட்சை திகதிகள் அறிவிப்பு!

கொழும்பு, ஜூலை 29

2022 கல்வி பொதுத் தராதர சாதாரண தர அழகியல் கலை பாடத்துக்கான செயன்முறை பரீட்சை எதிர்வரும் ஒகஸ்ட் 02 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை நடைபெறும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் 1,355 பரீட்சை மத்திய நிலையங்களில் செயன்முறைப் பரீட்சையை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

பாடசாலை பரீட்சார்த்திகளின் பரீட்சை அனுமதி 15

## மக்களுக்கான ரூ. 1,708 கோடியை தடுத்து வைத்துள்ளதா அரசு?

சமுர்த்தி அதிகாரிகள் சங்கம் கேள்வி

கொழும்பு, ஜூலை 29

வறிய மக்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து நலன்புரி திட்டங்களும் இடைநிறுத்தப்பட்டதால் ஆயிரத்து 708 கோடி ரூபாயை அரசாங்கம் தடுத்து வைத்திருப்பதாக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் நேற்று தெரிவித்தது.

சமுர்த்திக்கு பதிலாக அஸ்வெசும நலன்புரி திட்டத்தை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதுடன் அதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட வேலைத்திட்டம் பல பிரச்னைகள் எழுந்துள்ளன.

பயனாளிகளை தெரிவு செய்யும் முறையில் எழுந்த பிரச்னையால் மீண்டும் 15

## இப்படியும் நடக்கிறது

தமிழ் அரசியலில் தமிழரசு கட்சியின் பாராளுன்றக் குழுத் தலைவரும் திருகோணமலை மாவட்ட எம். பியுமான இரா. சம்பந்தனுக்கு நிகராக யாரும் இன்று இல்லை என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்காது.

அவருக்கு நிகராக அரசியலில் அனுபவமும் ஆளுமையும் உள்ள மற்றுமொருவராக ஆனந்தசங்கரி ஐயா இருந்தாலும் அவர் இன்று தமிழ் மக்களின் பிரதிநிதியாக இல்லை. நாம் சொல்ல வருவது, தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதியாக இல்லை என்பதையே.

சம்பந்தன் நீண்டகாலமாக பாராளுமன்றம் சென்றதில்லை. பாராளுமன்றத்தில் உரையாற்றக்கூடிய தெம்புடனும் அவர் இல்லை. அவரின் மூளையும் சிந்தனை ஆற்றலும் கொஞ்சமும் குறையவில்லை என்றாலும் அவற்றின் வேகத்துக்கு ஈடு கொடுக்கக்கூடிய வகையில் அவரின் உடல்நிலை ஒத்துழைப்பதாகத் தெரியவில்லை.

ஆனாலும் தமிழ் மக்களின் அரசியல் விவகாரம் என்றால் சம்பந்தன் என்ன நினைக்கிறார் என்பதை அறிய பலரும் விரும்புவது தவிர்க்க முடியாதது.

அண்மையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதுடில்லி செல்வதற்கு முன்னதாக சம்பந்தனை இந்தியத் தூதுவரும் அமெரிக்க தூதுவரும் அவரின் வீடு தேடிச் சென்று சந்தித்தனர்.

அப்போது, தெற்கில் ஒரு தகவல் உலா வந்தது. ஜனாதிபதி ரணில் இந்தியப் பிரதமரை சந்திக்கின்ற போது தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பாக அவரை வலியுறுத்துமாறு கோரி தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் போட்டிபோட்டுக் கொண்டு கடிதம் எழுதிக்கொண்டிருந்த காலம் அது. அதுவரை தமிழரசுக் கட்சி கடிதம் எதுவும் எழுதவில்லை. ஆனால், அப்படி எதனையும் வலியுறுத்தி - குறிப்பாக, பதின்மூன்றை அமுல்படுத்துமாறு கோரி மோடிக்கு கடிதம் எழுத வேண்டாம் என்றும் அத்தகைய அழுத்தங்கள் எதனையும் இப்போது கொடுக்கவேண்டாம் எனவும் கேட்பதற்காகவே தூதுவர்கள் இருவரும் சம்பந்தனைச் சந்தித்தார்கள் என்றும் இவர்கள் இருவரும் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் வெற்றி பெறும் வரை அவருக்கு சங்கடங்களை ஏற்படுத்த வேண்டாம் என்று கேட்பதற்காகவே சம்பந்தனை சந்தித்தார்கள் எனவும் தெற்கில் அப்போது பேசப்பட்டது.

மற்றைய தமிழ் கட்சிகள் மோடிக்குக் கடிதம் எழுதி விட்டபோதிலும் ஏன் சம்பந்தனிடம் மட்டும் இவர்கள் கேட்கவேண்டும் என்று தெற்கில் இது தொடர்பாகப் பேசிய ஒருவரிடம் கேட்டபோது, அவர் சொன்னார், 'சம்பந்தன் கடிதம் எழுதுவதற்கும் மற்றைய தலைவர்கள் எழுதுவதற்கும் வித்தியாசம் இருக்கின்றது அல்லவா' என்று.

ஆக, தெற்கில் இன்றும் சம்பந்தனுக்கென்று ஒரு கவனம் இருந்துகொண்டுதான் இருக்கின்றது. என்னதான் அவருக்கென்று ஒரு மரியாதை இருந்தாலும் அதனைக் காப்பாற்ற வேண்டியதும் நமது கடமைதான்.

நேற்றைய இந்தப் பத்தியில் நடந்து முடிந்த அனைத்துக் கட்சி கூட்டத்தில் கலந்துகொண்ட சில தெற்கு அரசியல் தலைவர்கள் பரிமாறிய விடயங்களைத் தருவதாகக் குறிப்பிட்டிருந்தேன்.

அவர்கள் அனைவரும் சம்பந்தன் மீது மரியாதை கொண்டிருப்பவர்கள்தான். ஆனால் அவர்கள் சொன்னது:

"சம்பந்தன் அன்றைய கூட்டத்தில் என்ன பேசினார் என்பதையே புரிந்து கொள்ள முடியவில்லை. அங்கு நடந்தவற்றை அவர் புரிந்துகொண்டிருப்பாரா என்பதும் தெரியவில்லை. அவர் தன்னை வருத்தி இது போன்ற கூட்டங்களுக்கு வரவேண்டுமா என்பது பற்றி அவர் இனியாவது யோசிக்க வேண்டும்."

தந்தை செல்வா தனது கடைசிக் காலத்தில் அவர் பேசுவது மற்றவர்களுக்கு புரியும் வகையில் இருந்ததில்லை. அதனாலேயே அவர் என்ன சொல்கிறார் என்பதைக் கேட்டு வெளியே அவர் தளபதியாக இருந்த அமிர்தலிங்கம் சொல்வார். ஆனாலும் கடைசிவரை அவர் மற்றவர் துணையின்றி நடமாடினார்.

இன்று சம்பந்தன் மற்றவர் துணையின்றி நடமாடவும் முடியாத நிலையில், இனியாவது தனது பணிகளை வீட்டில் இருந்தவாறே பார்க்கலாம். அவரின் கட்சியினரை அவர் வீட்டிலிருந்தவாறே வழி நடத்தலாம் என்ற அவர்களின் கோரிக்கையும் நியாயமானதாகவே இருந்தது.

**- ஊர்க்குருவி.**

# வடக்கில் இயல்புநிலை பாதிப்பு!




யாழ்.நகரப் பகுதி



நெல்லியடி




பருத்தித்துறை



சாவகச்சேரி



வவுனியா




முல்லைத்தீவு




மன்னார்

படங்கள் : ஐ. சிவசாந்தன், எஸ். தில்லைநாதன்

## 'சைவசமய வாழ்வியலும் ஆன்மிகமும்' நூல் வெளியீட்டுவிழா!

யாழ்ப்பாணம், ஜூலை 29

நல்லூர் வடக்கு சேர்ந்த சைவப்புலவர் அ. இராஜரட்ணத்தால் எழுதப்பட்ட 'சைவசமய வாழ்வியலும் ஆன்மிகமும்' எனும் நூல் வெளி யீட்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முன்னாள் இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் உடுவை. எஸ்.தில்லை நடராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நல்லை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாச்சரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

## வசந்த முதலிகேக்கு பிணை

கொழும்பு, ஜூலை 29

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் இணைப்பாளர் வசந்த முதலிகே கொழும்பு கோட்டை நீதிமன்றத்தால் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.



வசந்த முதலிகே மற்றும் மாணவர் ஒன்றிய செயற் பாட்டாளரான இந்திக வித்யாபத்திரன ஆகியோர் நேற்று முன் தினம் கறுவாத் தோட்டம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த 2020 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப் பாட்டத்தின்போது குழப்பம் ஏற்படுத்தியமை தொடர் பில் அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டு இருந்தது.

இந்த பிடியாணைக்கு அமைய இவர்கள் நேற்றுமுன்தினம் பொரளை மயானத்திற்கு அருகில் வைத்து குருந்துவத்தை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். (அ)

ஈழநாடு
Eelanadu
29.07.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், ஆடி 13

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசாங்கத்தின் பிடிவாதத்தின் பின்னணி

“நாங்கள் தொடர்ந்தும் பேசிக் கொண்டிருக்கின்றோம் - ஆனால், எந்தவொரு முன்னேற்றமும் ஏற்படவில்லை - நாங்கள் உள்ளக அதிகாரப் பகிர்வுக்கு தயாராக இருக்கின்ற அதேவேளை, அது கிடைக்காவிட்டால் வெளியக சுயநிர்ணய உரிமையை கோருவதற்கு நாங்கள் தயாராவோம்” - இவ்வாறு சர்வகட்சிக் கூட்டத்தில் இரா. சம்பந்தன் கூறினாரென செய்திகள் வெளியாகியிருந்தன.

சம்பந்தனும் சலிக்காமல் இவ்வாறு கூறிவருகின்றார் - அரசாங்கமும் எதையும் கண்டுகொள்வதில்லை என்பதில் உறுதியாக இருக்கின்றது. ஏன் அவர்கள் தமிழர் தரப்பின் கருத்துகளை பொருட்படுத்துவதில்லை? தமிழர் பக்கத்திலிருந்து அவ்வப்போது சத்தங்கள் எழுப்பப்படுகின்றன - அறிக்கைகள் வெளிவருகின்றன- கடையடைப்புகள் போன்ற வடிவங்களில் எதிர்ப்புகள் காண்பிக்கப்படுகின்றன. ஆனால் அரசாங்கமோ, நீங்கள் கத்துங்கள் - நாங்கள் செய்வதைத்தான் செய்வோம் - என்றவாறு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

யுத்தம் நிறைவுற்று 14 வருடங்களாகின்றன. இந்தக் காலத்தில் சர்வதேச அழுத்தம் என்பதே தமிழ்த் தேசிய அரசியலின் மந்திரமாக இருந்தது. சர்வதேச அழுத்தம் தொடர்பில் தமிழ் மக்களுக்குள் அளவுக்கதிகமாக நம்பிக்கையூட்டப்பட்டது. அரசியல்வாதிகள் மட்டுமல்ல புத்திஜீவிகளும் இந்த மந்திரத்தை அடிக்கடி முணுமுணுத்துக் கொண்டனர். தென்னிலங்கை ஒரு பொறிக்குள் அகப்பட்டுவிட்டதான கதையையே தொடர்ந்தும் கூறிவந்தனர்.

ஆனால் அரசாங்கமோ, அதன் அடிப்படையான அரசியல் அணுகுமுறைகளில் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் விட்டுக்கொடுப்புகளுக்கு தயாராக இல்லை. தொடர்ந்தும், இறுக்கமான நிலைப்பாட்டையே பின்பற்றிவருகின்றனர். ஆனால் மறுபுறம், இந்தியா - அமெரிக்கா - சீனா ஆகிய நாடுகளுடன் நெருக்கடியற்ற வகையிலான உறவுகளைப் பேணிக்கொள்வதில் கவனமாக செயல்படுகின்றது. ராஜபக்ஷக்கள் இந்த விடயத்தில் சரியாக நடந்துகொள்ளவில்லை. இதன் காரணமாகவே அவர்கள்மீதான அழுத்தங்கள் கொஞ்சம் சூடாக இருந்தன. ஆனால், 2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது அழுத்தங்கள் மயிலிறகால் தடவுவதாக சுருங்கிவிட்டது. இப்போது ரணில் இருக்கின்ற போதும் நிலைமை முன்னரைப் போல்தான் இருக்கின்றது.

இந்த நிலையில் தற்போது 13ஆவது திருத்தச் சட்டத்திலும் பொலிஸ் அதிகாரத்தைத் தரமுடியாதென்னும் வகையிலான அணுகுமுறை ஒன்றையே ரணில் கடைப்பிடிக்கின்றார். அரசாங்கத்தின்மீது பெரும் அழுத்தங்கள் இருக்கின்றமை உண்மையானால் ரணில் இவ்வாறு 13இலும் குறைப்பது பற்றிப் பேச முடியுமா? அவர்கள் ஒரு விடயத்தில் தெளிவாக இருக்கின்றார்கள். தமிழர் விடயத்தில் இப்படித்தான் நடந்துகொள்ள வேண்டுமென்று எந்தவொரு வெளித்தரப்பும் பிரத்தியேக அழுத்தங்களை பிரயோகிக்கப் போவதில்லை. இந்த நிலையில், தமிழ் கட்சிகளின் எச்சரிக்கைகளை தென்னிலங்கை ஒரு நகைச்சுவையாகவே கடந்து செல்கின்றது.

ஏனெனில், தமிழர் பக்கத்தில் பேரம் பேசுவதற்கான பலமில்லை. பேரம் பேசும் பலமென்பது ஒன்றில் சொந்த பலத்திலிருந்து வரவேண்டும் - அல்லது வெளியாரின் தலையீட்டால் வரவேண்டும். இதுவரையில் சிங்கள ஆட்சியாளர்கள் கீழிறங்கிய இரண்டு வரலாற்று சந்தர்ப்பங்களும் பலத்தின் அடிப்படையிலான தமிழ் தலையீட்டின் விளைவாகும். இதில் முதலாவதில், தமிழர்களுக்கு ஆதரவாக இந்தியா நேரடியாகக் களத்தில் இறங்கியது. ஆனால், இன்றைய சூழலில் இந்தியாவின் அணுகுமுறை முற்றிலும் இராஜதந்திர ரீதியிலானது. இந்தியாவின் முன்னைய அனுபவங்கள் ஓர் எல்லைக்கு மேல் இந்தியாவை தமிழர் விடயத்தில் தலையீடு செய்ய முடியாதளவுக்குத் தடுக்கின்றது. இது விளங்கிக்கொள்ளக்கூடிய ஒன்றுதான். இன்றைய இந்திய அணுகுமுறை முற்றிலும் மென் அழுத்தமாக மாறிவிட்டது. இந்தப் பின்புலத்தில்தான் தமிழர் தரப்பின் சத்தங்களை தென்னிலங்கையால் ஒரு நகைச்சுவை காட்சிபோல் சாதாரணமாக சிரித்துக்கொண்டு கடந்து செல்ல முடிகின்றது. அவர்கள் சிரித்துக் கொண்டிருக்கின்றனர் - தமிழ்த் தேசிய கட்சிகளோ தங்களுக்குள் யார் உத்தமர் என்பதில் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றன.

# நூற்றாண்டு காண்கிறாள் நெல்லியடி மத்திய கல்லூரி தாய்

**நெல்லியடி மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழாவை ஒட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

**சாம்பசிவம் ஹரிகரன்**
B.A, PGDP, M.A in Political science, M Phil (R)
பழைய மாணவன்



*வடமராட்சியின் மத்தியில் அமைந்திருந்து கல்வி பணியாற்றி பல கல்வியியலாளர்களை, புத்திஜீவிகளை, எழுத்தாளர்களை இலங்கை திருநாட்டுக்கு தந்து மாபெரும் கல்வி பணியை ஆற்றிய நெல்லியடி மத்திய கல்லூரி தன்னுடைய நூற்றாண்டு விழாவை இனிதே கொண்டாடுகிறது.*

*இந்த பாடசாலையின் கல்விப் பயணம் இலகுவான பயணமாக அமைந்ததில்லை. நெருக்கடிகள் பலவற்றை தாண்டி சாவின் கர்ப்பத்தில் இருந்து மீளெழும் பீனிக்ஸ் பறவை போலவே நெல்லியடி மத்திய கல்லூரியின் பயணம் இருந்தது. 1921ஆம் ஆண்டு மாதிரி பாடசாலையாக தொடங்கி மத்திய மகா வித்தியாலயமாக தரம் உயர்ந்து தேசிய பாடசாலையாக உயர்ந்து நெல்லியடி - கரவெட்டி நகரில் வடமராட்சி மண்ணின் மத்தியில் கல்விப்பணி ஆற்றுவது இதன் சிறப்புகளில் முதன்மையானது.*

*மிஷனரிமார், சமயப் பெரியார்கள், சமூக நலன் விரும்பிகளின் அயராத பங்களிப்பும் அதிகாரிகளின் இடையறா முயற்சியின் விளைவாக 1918ஆம் ஆண்டு யாழ். மாவட்ட நில அளவை நாயகத்தின் கோரிக்கையின் பிரகாரம் 1919 ஆண்டு வெறும் ஓர் ஏக்கர் 3 றூட் 28.1 பேர்ச் காணி சுவீகரிக்கப்பட்டு ஒரு மாதிரி மாதிரி பாட சாலையாக இந்தக் கல்லூரி ஆரம்பிக்கப் பட்டது. இதன் பின் காலத்துக்கு காலம் கல்லூரி பெரியோரும் அதிபர்களும் பிரதேச அரசியல்வாதிகளும் எடுத்த அயராத முயற்சி யின் காரணமாக இன்று 9 ஏக்கர் காணியில் சகல வித கட்டுமானங்களுடனும் வசதிகளு டனும் தேசிய பாடசாலையாக தரம் உயர்ந்து நிற்கிறது.*

*இலங்கையின் இலவசக் கல்வியின் தந்தை என விதந்து போற்றப்படும் சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா அவர்கள் நாடு முழுவதும் 54 மத்திய மகா வித்தியாலயங்களை நிறுவ முயன்றபோது யாழ். குடா நாட்டில் தெரிவு செய்யப்பட்ட 4 மத்திய மகா வித்தியாலயங்களில் ஒன்றாக இந்தக் கல்லூரி அமைந்தது. மேலும் வடமராட்சியில் தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒரு மத்திய மகா வித்தியாலயமாக இந்தக் கல்லூரியே அமைந்தது.*

*அன்றைய அரசியல்வாதிகளான பொன். கந்தையா, ராஜலிங்கம் ஆகிய பிரதேச அரசியல்வாதிகளும் இக்கல்லூரிக்கு ஆற்றிய பங்களிப்பு விதந்து போற்றப்பட வேண்டியதே. அழகொளிரும் நிர்வாக கட்டடம், ஆராதனை மண்டபம் என அவர்களால் இப்பாடசாலைக்கு பெருமளவு பங்களிப்பும் உதவிகளும் ஒத்தாசைகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும். காலத்துக்கு காலம் பாடசாலையை பொறுப்பெடுத்த அதிபர்களான கலாநிதி சிவப்பிரகாசம், இரத்தினசபாபதி, மு. சிவசிதம்பரம், கே. குணரட்ணம், வி. கே. நல்லையா, ரோய். காந்தராஜா, நடராஜா ஆகியோரின் அபரிதமான பங்களிப்பு நிர்வாகத் திறமை காரணமாக பாடசாலையை சிறப்பாக முகாமை செய்து பெற்று கொண்டு வளர்ச்சிகளும் உயர்ச்சிகளும் அளப்பரியன.*

*1960 காலப்பகுதியில் சிரேஷ்ட இடைநிலை கல்வி வழங்கும் உயர் தர விஞ்ஞான பிரிவு உட்பட சகல கல்விப் பிரிவுகளையும் தன்னுள் உள்ளடக்கி ஆய்வு கூட வசதிகள் விவசாயக் கல்விக்குரிய பண்ணை வசதிகள், சகல துறை சார் ஆய்வு கூடங்களை கொண்டு நாடே வியந்து பார்க்கின்ற அளவுக்கு புத்திஜீவிகளை உருவாக்கிய கல்லூரியாக இந்தக் கல்லூரியே திகழ்ந்தது. நாட்டின் பல்வேறு பிரதேச மாணவர்கள் விடுதிகளில் தங்கி தமது அறிவு பசியை போக்க இந்தக் கல்லூரி பெருமளவு பங்களிப்பை வழங்கியதை வரலாற்று பக்கங்களில் தெளிவாகவே உணர முடிகின்றது.*

*வடக்கு - கிழக்கை மோசமாக ஆக்கிரமித்த உள்நாட்டு போர் இந்தக் கல்லூரியையும் விட்டு வைக்கவில்லை. 1987 ஆம் ஆண்டு ஜூலை 5ஆம் திகதி இடம்பெற்ற மிகப்பெரிய யுத்த நடவடிக்கையில் இக்கல்லூரியின் அனைத்து கட்டடங்களும் முழுமையாகவும் சில பகுதியளவிலும் சேதமடைந்தன. எனினும் இந்தப் பேரழிவலிருந்து அதிபர்களான சிற்றம்பலம், சேதுராஜா, கிருஷ்ணகுமார் ஆகியோரின் அயராத முயற்சியால் கல்லூரி மீண்டும் எழுச்சி பெற்றது. இன்று, ஆயிரம் பேர் அமரக்கூடிய ஆராதனை மண்டபம், நூலகம், திறன் வகுப்பறைகள் கணினி ஆய்வு கூடங்கள், தொழில்நுட்பகூடங்கள், விளையாட்டு மைதான வசதிகள், விடுதிக்கான கட்டடங்கள் என்பவற்றுடன் மிகப்பெரிய கல்லூரியாக உயர்ந்து நிற்கின்றது. பாடவிதான, இணைப்பாடவிதான அடைவுகளில் கல்விப்பெறுபேறுகளின் அடிப்படையில் ஏறுமுகம் காட்டி இன்னும் மிடுக்கோடு இக்கல்லூரி பயணிக்கிறது. நூற்றாண்டை கடந்து வெற்றி நடைபோடும் நெல்லியடி மத்திய கல்லூரி மேலும் பல நூறாண்டுகளை தொட்டு - உயரிய கல்வி பணியாற்ற வாழ்த்தி - வணங்குவோம்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**ஜூலை - 29 சனிக்கிழமை**
சோபகிருது வருடம் - ஆடி 13
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : துவாதசி




## இன்றைய ராசிபலன்

**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப்பேச்சிற்கும் ஆளாவீர்கள். சகஊழியர்களை உதாசின படுத்த வேண்டாம். விட்டுக் கொடுக்க வேண்டிய நாள்.

**இடபம்**
கடினமான வேலைகளை எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் பயனடைவீர்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். நிர்வாகத் திறமை வெளிப்படும். அனுபவ அறிவால் சாதிக்கும் நாள்.

**மிதுனம்**
உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பணவரவு திருப்தி தரும். அதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்து கொள்வீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**கடகம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**சிம்மம்**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**கன்னி**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். சொத்துப்பிரச்னை தீரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**துலாம்**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். புது அதிகாரி உங்களை மதிப்பார். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் உணர்ச்சிவசப்பட்டு அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**தனுசு**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் ஓரளவு லாபம் வரும். சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**மகரம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்கள் நிறைவேறும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மதிப்புக் கூடும்.

**கும்பம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்து கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். சாதித்துக் காட்டும் நாள்.

**மீனம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். புதிய அத்தியாயம் தொடங்கும் நாள்.

# நெய்வேலி போராட்டம் கலவரமானது; பா. ம. க. தலைவர் அன்புமணி கைது!

## பா. ம. கவினர் - பொலிஸார் மோதலால் பதற்றம்!



கடலூர், ஜூலை 2

விவசாய நிலங்களை கையகப்படுத்தும் என். எல். சி. நிறுவனத்தை முற்றுகையிட்டு நேற்று பா. ம. க. போராட்டம் நடத்தியது. இதன்போது, அந்தக் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் கைது செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து அங்கு வன்முறை வெடித்தது. பா. ம. கவினர் கற்களை எறிந்து தாக்கியதைத் தொடர்ந்து பொலிஸார் தடியடி உள்ளிட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதனால், அந்தப் பகுதியே போர்க்களமாக காட்சியளித்தது.

முற்றுகைப் போராட்டத்துக்கு நேற்று முன்தினம் பா. ம. க. அழைப்பு விடுத்தது. இதன் தொடர்ச்சியாக நெய்வேலி என். எல். சி. பழுப்பு நிலக்கரி நிறுவனத்துக்கு நிலம் கையகப் படுத்துவதை கண்டித்து பா. ம. க. சார்பில் நெய்வேலியில் நேற்று முற்றுகை போராட்டம் பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தலைமையில் நடைபெற்றது. அப்போது, என். எல். சி. நுழைவாயில் முன்பு தனது தொண்டர்களுடன் நுழைய முற்பட்ட அன்புமணி ராமதாஸை பொலிஸார் தடுத்தனர். இதனால் கட்சித் தொண்டர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இந்த தள்ளுமுள்ளுக்கு மத்தியில் அன்புமணி ராமதாஸை கைது செய்ய வாகனம் வரவழைக்கப்பட்டது.

இதனால் கோபமடைந்த பா. ம. க. தொண்டர்கள் பொலிஸாரின் வாகனத்தின் கண்ணாடிகளை அடித்து நொறுக்கினர். இதனால் பதற்றநிலைமை ஏற்பட்டது. பொலிஸார் அவர்களை விரட்டினர். சிறிது நேரத்தில் அன்புமணி பொலிஸ் வாகனத்தில் னில் ஏற்றப்பட்டார். அவரை கைது செய்து திருமண மண்டபத்துக்கு அழைத்துச் செல்ல முற்பட்டபோது, பா. ம. கவினர் அவரை கைது செய்யக்கூடாது என்று வலியுறுத்தி வாகனம் முன்பு அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர்.

இதனால் மேலும் பதற்றம் அதிகரித்தது. பொலிஸார் அவர்களை கலைந்து போக எச்சரித்தும் அவர்கள் மறுத்து விட்டனர். தொண்டர்கள் சிலர் கல்வீச்சுத் தாக்குதலில் ஈடுபட்டதால் பொலிஸார் அவர்கள்மீது தடியடி நடத்தி கலைத்தனர். பதிலுக்கு பா. ம. கவினரும் கல்வீச்சு தாக்குதலில் ஈடுபட்டதால் தண்ணீர் வீசியடித்துக் கலைத்தனர்.

இதனால் சுமார் அரை மணி நேரம் பொலிஸாருக்கும் பா. ம. கவினருக்கும் பெரும் போராட்டம் நடைபெற்றது. ஒரு வழியாக, பா. ம. க. சமூக நீதிப் பேரவை தலைவர் பாலு, தொண்டர்களிடம் பேசி அமைதி காக்குமாறு வலியுறுத்தினார். இதனைத் தொடர்ந்து பா. ம. கவினர் கலைந்து சென்றனர். இதன் பின் அன்புமணி ராமதாஸ் கைது செய்யப்பட்டு திருமண மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இதன் காரணமாக என். எல். சி. வளாகத்தில் பதற்றம் நிலவியது.

(ஐ)

# “நிலம் கையகப்படுத்தலை அரசு நிறுத்த வேண்டும்!”



நெய்வேலி, ஜூலை 29

“கதிர்விடும் நிலையில் இருக்கும் நெற்பயிர்களை அழிப்பதைப் பார்த்துக்கொண்டு என்னால் சும்மா இருக்க முடியவில்லை. இரண்டு நாட்களாக எனக்கு தூக்கம் வரவில்லை. அதனால்தான் இங்கு வந்திருக்கிறோம். எனவே, அரசாங்கம் இதை உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லையென்றால் மிகப் பெரிய விளைவுகளை சந்திக்கக்கூடும்” என்று பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

என். எல். சி. நிறுவனத்தை முற்றுகையிட்டு பா. ம. க. போராட்டம் நடத்திய நிலையில், அந்தக் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் கைது செய்யப்பட்டார். அப்போது செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியவை வருமாறு, “எங்களுடைய நோக்கமே, இனி விளை நிலங்களை தமிழக அரசு என். எல். சிக்காக எடுத்துக் கொடுக்கக்கூடாது. என்எல்சி நிர்வாகம், 66 ஆண்டுகாலம் தமிழகத்தில் இயங்கி, ஒட்டு மொத்த கடலூர் மாவட்டத்தையும் அழித்துவிட்டது.

8 அடியில் கிடைத்துக் கொண்டிருந்த நிலத்தடி நீர், இன்று கடலூர் மாவட்டத்தில் 800 அடிக்கு சென்றுவிட்டது. அதற்கு காரணம் என். எல். சி. உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடையாது. என். எல். சியால், இந்த பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு வாழ்வாதாரம் கிடையாது.

கடலூர் மாவட்டத்தை தொடர்ச்சியாக அழித்துக் கொண்டிருக்கும் இந்த என்எல்சி நிர்வாகம் தேவையில்லை. எல்லாவற்றுக்கும் மேல், தமிழகம் இன்று மின்மிகை மாநிலகமாக மாறியிருக்கிறது. இதை அமைச்சரே கூறியிருக்கிறார். மின்மிகை மாநிலமாக தமிழகம் இருப்பதால், வெளி மாநிலங்களுக்கு மின்சாரத்தை விற்பனை செய்வதாக அமைச்சர் கூறியிருக்கிறார். அப்படியிருக்கும்போது, இங்கு என். எல். சி. நிர்வாகமே தேவையில்லை - என்றார்.

(ஐ)

# நெல்லியடி மத்தியின் நூற்றாண்டு விழா



வடமராட்சி, ஜூலை 29
நெல்லியடி மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழா இன்று மிக சிறப்பாக இடம் பெற்றுள்ளது.
நேற்று முன் தினம் முதலாம் நாள் நிகழ்வாக காலை மாணவர்களின் துவிச்சக்கர வண்டி பவனி காலை 8:30 மணியளவில் இடம் பெற்றதுடன் பழைய மாணவர்களின் வாகன பவனியும், பனம் கன்றுகளும் நாட்டி வைக்கப்பட்டன.
காலை 8:39 மணியளவில் ஆரம்பமான துவிச்சக்கர வண்டி மற்றும் வாகன பேரணி நெல்லியடி நகர் ஊடாக மூத்த விநாயகர் ஆலயம் வரை சென்று அங்கிருந்து சோனப்பு வீதி ஊடாக சென்று பின்னர் மண்டான் உடுப்பிட்டி வீதி ஊடாக மாலிசந்தி ஊடாக மீண்டும் பாடசாலையை சென்றடைந்து அங்கு இரண்டு மணியளவில் நூறாவது ஆண்டை முன்னிட்டு நினைவு முத்திரை வெளியீட்டி வைக்கப்பட்டுள்ளது.
ஊர்தி பவனியில் இராணுவ பீரங்கி ஒன்று கடோற் அணியினரால் உருவாக்கப்பட்டு அதுவும் காட்சியாக கொண்டு செல்லப்பட்டது.
பாடசாலை அதிபர் கிருஸ்ணகுமார் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வுகளில் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என பல நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். (அ-02)

# யாழில் 17 வயதுச் சிறுமி உயிரிழப்பு; விசாரணைக்கு 2 பொலிஸ் அணிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 29
யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்வியங்காடு பகுதியில் 17 வயதுச் சிறுமி உயிரிழந்தமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரினால் இரண்டு பொலிஸ் அணிகள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.
உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான இரண்டு அணிகள் குறித்த சிறுமியின் மரணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் விசாரணையின் பின்னர் உரிய சட்ட நடவடிக்கை முன்னெடுக்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-03)

# முன்னணியின் பெண் செயல்பாட்டாளர் வீட்டினுள் பொலிஸார் புகுந்து அடாவடி!

**அச்சுறுத்தி அடிபணியச் செய்ய முயற்சி என குற்றச்சாட்டு**

யாழ்ப்பாணம், ஜூலை 29
**சகாயபுரம், மாதகல் பகுதியில் வசிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளீர் அணிச் செயற்பாட்டாளர் ராஜினி என்பவரின் வீட்டினுள் நேற்று முன் தினம் இரவு 10.45 மணியளவில் இளவாலைப் பொலிஸார் அத்துமீறி நுழைந்து அடாவடியில் ஈடுபட்டுள்ளனர் எனக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.**
முல்லைத்தீவில் இடம்பெற்ற மனிதப் புதைகுழிக்கு சர்வதேச நீதி கோரும் போராட்டத்துக்கு பொது மக்களைத் தயார்ப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த கட்சியின் மிக முக்கிய செயற்பாட்டாளர் ராஜினியை அச்சுறுத்தி அடிபணியச் செய்யும் நோக்கிலேயே பொலிஸாரின் அத்துமீறல் இடம்பெற்றுள்ளது என கட்சி வட்டாரங்கள் குற்றம் சாட்டியுள்ளன.
இளவாலை பொலிஸாரின் இச் செயற்பாட்டை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என தமிழ்தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது. (அ)

# களுத்துறை கடற்கரையில் குழந்தையின் சடலம்!

கொழும்பு, ஜூலை 29
களுத்துறை வடக்கு கடற்கரையில் இரண்டரை வயது மதிக்கத்தக்க குழந்தையின் சடலம் கரையொதுங்கியுள்ளது.
எனினும், குறித்த குழந்தையின் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தநிலையில் குழந்தை காணாமல்போனமை தொடர்பில், இதுவரை பொலிஸாருக்கு முறைப்பாடு எதுவும் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.
குறித்த குழந்தையின் சடலம், கடற்கரையில் இருப்பதால், அந்த இடத்தில் பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
நீதவான் விசாரணைகளின் பின்னர் சடலம் மீதான பிரேத பரிசோதனைகள் இடம்பெறவுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# ஆனைக்கோட்டைப் பிரதேசத்தில் திருச்சொரூபங்கள் மீது தாக்குதல்!





யாழ்ப்பாணம், ஜூலை 29
ஆனைக்கோட்டை பகுதிகளில் உள்ள 06 இற்கும் மேற்பட்ட கிறிஸ்தவ திருச் சொரூபங்கள் மீது இனம் தெரியாத கும்பல்கள் தாக்குதல் நடத்திச் சேதம் ஏற்படுத்தியுள்ளன.
ஆனைக்கோட்டைப் பகுதியில் வீடுகளுக்கு முன்னால் உள்ள திருச்சொரூபங்கள் மீது நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலைவேளை இனம் தெரியாத கும்பல்கள் தாக்குதல் நடத்தியுள்ளன.
அதில் 2 இடங்களில் சொரூபங்களின் தலைகள் உட்பட சொரூபங்கள் முழுமையாகச் சேதமாக்கப்பட்டுள்ளன. மேலும் இரண்டு இடங்களில் சொரூபங்கள் பகுதிகளவில் சேதமாக்கப்பட்டுள்ளன. மற்றைய இடங்களில் சொரூபங்கள் வைத்திருந்த கண்ணாடிக் கூடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன.
இந்தச் சம்பவங்கள் தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# வல்வெட்டித்துறையில் 5 முதலைகள் பிடிபட்டன



யாழ்ப்பாணம், ஜூலை 29
வல்வெட்டித்துறை பகுதியில் நேற்று முன்தினம் 5 முதலைகள் பிடிக்கப்பட்டு வனஜீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.
தொண்டமனாமாறு செல்வச்சந்நிதி ஆற்று நீரேரியில் நீண்ட காலமாக முதலைகளின் அச்சுறுத்தல் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்து வந்த நிலையிலேயே குறித்த முதலைகள் பிடிக்கப்பட்டுள்ளன.
ஆற்று நீரேரியில் 4 முதலைகளும் கொம்மந்தறை பகுதியில் உள்ள நீர் சகதியில் ஒரு முதலையும் பிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ)

# குளவி கொட்டுக்கு இலக்காகிய 17 மாணவர்கள் வைத்தியசாலையில்

கொழும்பு, ஜூலை 29
மதவாச்சி, கடவத்கம பிரதேசத்தில் குளவி கொட்டுக்கு இலக்கான 17 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
கடவத்கம பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் மேலதிக வகுப்புகளில் கலந்துகொண்ட மாணவர்களே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
குறித்த பாடசாலையில் இருந்த குளவிக்கூட்டை குரங்குகள் கலைத்ததன் காரணமாக இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.
தாக்குதலில் காயமடைந்த மாணவர்களில் 10 ஆண் பிள்ளைகளும் 7 பெண் பிள்ளைகளும் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.
இதேவேளை, காயமடைந்த மாணவர்கள் 11 தொடக்கம் 16 வயதுக்குட்பட்ட , கடவத்கம பிரதேசத்தில் வசிப்பவர்கள் என தெரிய வந்துள்ளது.
குளவி கொட்டுக்கு இலக்கான மாணவர்கள் மதவாச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன் மேலதிக சிகிச்சைகளுக்காக ஒருவர் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (அ)

# இன, பிரதேச அடிப்படையில் அதிகாரப் பகிர்வுக்கு எதிர்ப்பு!

## சுதந்திரக் கட்சி அறிவிப்பு

கொழும்பு, ஜுலை 29

**அபிவிருத்திக்கான அதிகாரப் பகிர்வுக்கு சுதந்திரக் கட்சி ஆதரவளிக்கும் என சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.**

**கொழும்பில் சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுடன் இணைந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

எவ்வாறாயினும், பிரதேசங்கள் அல்லது இனங்களின் அடிப்படையிலான அதிகாரப் பகிர்வுக்கு சுதந்திரக் கட்சி ஆதரவளிக்காது. ஆனால் அபிவிருத்திக்காக மட்டுமே அதிகாரப் பகிர்வுக்கு கட்சி ஆதரவளிக்கும்.

தற்போதைய மாகாண சபை முறைமையில் பல்வேறு பிரச்னைகள் ஏற்பட்டுள்ளதால் கட்சியின் கருத்தின்படி மாகாண சபை முறைமை திருத்தப்பட வேண்டும். உதாரணமாக, மத்திய அரசு மற்றும் மாகாண சபையின் அதிகாரப் போட்டியால் உருவாக்கப்பட்ட கல்வி மற்றும் சுகாதாரப் பிரச்னைகளை அடையாளம் காண முடியும்.

மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் முறையான கலந்துரையாடல் நடத்தப்படவேண்டும்.

கட்சியின் நிலைப்பாட்டின்படி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதில் சிக்கல்கள் உள்ளன. மேலும் இது குறித்து விவாதிக்கப்படவேண்டும்.

எவ்வாறாயினும், 13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டு மாகாண சபைகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என குறிப்பிட்ட சில தமிழ் அரசியல்வாதிகள் கருதுகின்றனர்.

புதன்கிழமை நடைபெற்ற அனைத்துக் கட்சி மாநாட்டில் இது குறித்து விரிவாகப் பேசப்பட்டது.

இருப்பினும், கலந்துரையாடலின் போது, இந்த பிரச்னையில் அரசாங்கம் நிலையான தாக இல்லை என்று கண்டறியப்பட்டது. குறிப்பாக பொது ஜன பெரமுன இந்த விடயத்தில் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை என்பது காணப்படுகின்றது. அரசாங்கத்துக்கும் பெரமுனவுக்கும் ஒரு நிலையான கருத்து இல்லை என்பது அவதானிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், மாகாண சபைகளுக்குப் பதிலாக "மாவட்ட சபை" முறையை அமுல்படுத்துமாறு சிறீ லங்கா சுதந்திரக் கட்சியினால் அரசாங்கத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், மாகாண சபையின் இடத்தில் மாவட்ட சபைகளை நிறுவும் முன்மொழிவை தமிழ் அரசியல் கட்சிகளோ அல்லது தெற்கில் உள்ள சில கட்சிகளோ ஊக்குவிக்கவில்லை.

மாகாணசபை முறைமை வலுப்படுத்தப்பட்டு தேர்தலை நடத்த வேண்டும் அல்லது இல்லாதொழிக்க வேண்டும். மாகாண சபை முறைமை மீண்டும் அமுல்படுத்தப்பட்டு தேர்தல் நடத்தப்பட வேண்டும் அல்லது ஒழிக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# முட்டை விற்பனையில் இலங்கை புதிய சாதனை

கொழும்பு, ஜுலை 29

இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளதுடன், ஒரே நாளில் சாதனை விற்பனையை எட்டியுள்ளதாக லங்கா சதொசவின் தலைவர் பசந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குறைந்தது மூன்று நாட்களுக்கு நீடிக்கும் என எதிர்பார்த்து நாங்கள் கையிருப்புக்களை விநியோகித்தோம். ஆனால் முட்டைகள் பெரும்பாலும் எங்கள் விற்பனையகங்களில் விற்றுத் தீர்ந்துவிட்டதாக அறிய முடிகின்றது.

438,000 முட்டைகளில், 420,000 முட்டைகள் நேற்று முன் தினம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மேல்மாகாணத்தில் இருப்புக்களை நிரப்பவும் பராமரிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இதேவேளை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களுக்கும் முட்டைகள் விநியோகிக்கப்படும்-என்றார். (அ)

# நீதிமன்றத்துக்குள் ஆவணத்தை விழுங்கிய சட்டத்தரணி கைது!

கொழும்பு, ஜுலை 29

கெக்கிராவ மாவட்ட நீதவான் நீதிமன்றில் நிலுவையில் உள்ள காணி வழக்கு தொடர்பில் ஆவண காப்பகத்தில் இருந்த ஆவணங்களின் இரண்டு பிரதிகளை கிழித்து அழித்ததாக கூறப்படும் பெண் சட்டத்தரணி ஒருவரை கெக்கிராவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கெக்கிராவ மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றப் பதிவேட்டில் காணி வழக்குக் தொடர்பான கோப்பிலிருந்து இரண்டு ஆவணங்களைக் கிழித்து நீதிமன்றத்திற்குள் மென்று அழித்துவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காப்பகத்தில் கடமையாற்றிய நீதிமன்ற அதிகாரிகள் நீதிமன்ற பதிவாளருக்கு அறிவித்தையடுத்து அவர் கைது செய்யப்பட்டார்.

அப்போது நீதிமன்றத்தில் கடமையாற்றியிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் சந்தேகமடைந்த சட்டத்தரணியை பரிசோதித்தபோது, அவர் மென்று அழித்த ஆவணங்களில் சில துண்டுகள் கிடைத்துள்ளன.

சட்டத்தரணி இன்று கெக்கிராவ நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# அங்கொடை வைத்தியசாலையில் மனநோயாளி அடித்துக்கொலை!

கொழும்பு, ஜுலை 29

அங்கொடை தேசிய மனநல வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற நோயாளி ஒருவர் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் முல்லேரியா பொலிஸாரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்தவரின் உறவினர்களால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வட்டரெக பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 47 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

நீண்டகாலமாக மனநோய்க்கு ஆளான குறித்த நோயாளி, தீவிரமடைந்த நோய் நிலைமை காரணமாக கடந்த 20ஆம் திகதி அங்கொடை மனநல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

எனினும், கடந்த 25ஆம் திகதி அதிகாலை வேளையில் குளியலறையில், வழுக்கி விழுந்த சந்தர்ப்பத்தில், தலையில் அடிப்பட்டதால் அவர் மரணித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

எனினும், குறித்த நோயாளியின் சடலம் முத்திரையிடப்பட்ட நிலையில், உறவினர்களிடம் வழங்கப்பட்டதன் காரணமாக உறவினர்களுக்கு ஏற்பட்ட சந்தேகத்தால் முல்லேரியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதன்படி அந்த வைத்தியசாலையின் விசேட சட்டவைத்திய அதிகாரி சன்ன பெரேராவினால் பிரேத பரிசோதனை நடத்தப்பட்டது.

ஆயுதங்களால் தாக்கப்பட்டமையால் ஏற்பட்ட பல தாக்க நிலைமைகள் காரணமாக குறித்த நபர் மரணித்தார் என்று பிரேத பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டது.

வைத்தியசாலை பணியாளர்களின் தாக்குதலுக்கு இலக்காகிய நிலையிலேயே அவர் உயிரிழந்தார் என்று குறித்த நோயாளியின் உறவினர்கள் குற்றம் சுமத்தினர்.

இந்த விடயம் தொடர்பில், தேசிய மனநல வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் தம்மிக்கா விஜேசிங்கவைத் தொடர்பு கொண்டு ஊடகங்கள் வினவியபோது, "சுகாதார அமைச்சின் அனுமதியின்றி எந்தக் கருத்துக்களையும் ஊடகங்களுக்கு வெளியிட முடியாது"-என்று பதிலளித்தார். (அ)

# பல் மருத்துவ சேவையில் மருந்துகள் பற்றாக்குறை

கொழும்பு, ஜுலை 29

பல் மருத்துவ சேவையில் பற்றாக்குறையாக உள்ள சில அத்தியாவசிய மருந்துகளை அவசர கொள்முதல் நடவடிக்கையின் கீழ் கொள்வனவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

சிகிச்சைக்குத் தேவையான மருந்துகள் மற்றும் உபகரணங்களின் பற்றாக்குறையால் தேசிய பல் வைத்தியசாலை உட்பட முழு வைத்தியசாலை அமைப்பின் பல் வைத்தியசாலைகளிலும் சிகிச்சை வீழ்ச்சியடைந்து வருவதாக அரசாங்க பல் சத்திர சிகிச்சை நிபுணர்கள் சங்கம் சுகாதார அமைச்சுக்கு அறிவித்திருந்தது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த வைத்தியர் சமன் ரத்நாயக்க, பல் வைத்திய சேவையை நடத்துவதற்கு தேவையான சுமார் 270 மருந்துகளின் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், விரைவில் அவற்றை கொள்வனவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

சிலர் பேசுவது போன்று நாட்டில் மருந்துப் பொருட்களுக்கு பாரிய தட்டுப்பாடு இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், போதைப் பொருள் மாபியா சுகாதார அமைச்சை கட்டுப்படுத்தும் விதம் தொடர்பில் விசாரணை நடத்தப்படவேண்டுமென சுகாதார நிபுணர்கள் சங்கத்தின் தலைவர்.ரவி குமுதேஷ் தெரிவித்தார். (அ)

# நிதி நிறுவனம் நடத்தி பணத்துடன் தலைமறைவானவர்களுக்கு வலை!

கொழும்பு, ஜுலை 29

குருநாகலில் அமைந்துள்ள நிதி நிறுவனமொன்றில் 6 சதவீத வட்டி தருவதாகக் கூறி பணத்தை முதலீடு செய்த வைப்பாளர்களை ஏமாற்றி தலைமறைவாகியுள்ள சந்தேக நபரைக் கைது செய்வதற்கான விசாரணைகளை நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர்.

சந்தேக நபருக்கான பயணத் தடையும் பெறப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிதி நிறுவனத்தில் மருத்துவர்கள், பாதுகாப்பு அதிகாரிகள், ஓய்வுபெற்ற பாதுகாப்பு அதிகாரிகள், அரசு உயர் அதிகாரிகள், அரசு மற்றும் தனியார் துறை ஊழியர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் பணத்தை முதலீடு செய்துள்ளதாக நிதி மற்றும் வணிக குற்றப் புலனாய்வுப் பிரிவு கண்டுபிடித்துள்ளது.

2020ஆம் ஆண்டு கவர்ச்சிகரமான 6 சதவீத வட்டி வழங்குவதாக கூறி சந்தேகநபர் இந்த நிதி நிறுவனத்தை நடத்தி வந்துள்ளதாகவும், கடந்த சில வருடங்களில் சுமார் 8000 வைப்பாளர்கள் இந்த நிதி நிறுவனத்தில் பணத்தை முதலீடு செய்துள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சந்தேகநபர்கள் ஆரம்பத்தில் வைப்புத்தொகையாளர்களுக்கு 6 வீத வட்டி வழங்கியதாகவும், பின்னர் அது 3 வீதமாகக் குறைக்கப்பட்டதாகவும், பின்னர் அதே தொகையை அவர்கள் செலுத்தத் தவறியதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

# இனப்பிரச்னையை தீர்க்க மக்கள் ஆணை அவசியம்!

## வலியுறுத்துகிறார் விஜித் விஜயமுனி

கொழும்பு, ஜூலை 29

**தற்போதாவது நாம் இணைந்து தீர்க்கவேண்டிய இனப்பிரச்னையை தீர்க்க உண்மையான மக்கள் ஆணை அவசியம் என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்தார்.**

**எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறினார்.**



இதன் போது ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற சர்வக்கட்சி மாநாடு குறித்து கருத்து வெளியிட்டுள்ள விஜயமுனி சொய்சா,

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்தாத பேய், மாகாண சபை தேர்தலை நடத்துமா?.

சகல கட்சிகளும் இனப்பிரச்னையை பயன்படுத்தி ஆட்சியை கைப்பற்றியதுடன் சகல கட்சிகளும் இனப்பிரச்னையை ஏற்படுத்தின.

ஒன்றாக இணைந்து வாழ முடியும் என்ற சிங்கள மற்றும் தமிழ் தலைவர்கள் வெள்ளையர்களிடம் இருந்து சுதந்திரத்தை பெற்றனர்.

பண்டாரநாயக்க ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக சிங்கள மொழியை அரசகரும மொழியாக அறிவித்தார்.

அதிகாரத்தை பரவலாக்கவும் எதனை செய்யவேண்டுமாக இருந்தாலும் மக்கள் ஆணை அவசியம். மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

தற்போதாவது நாம் இணைந்து தீர்க்கவேண்டிய இனப்பிரச்னையை தீர்க்க உண்மையான மக்கள் ஆணை அவசியம்.

தெற்கில் ஒன்றையும், வடக்கில் வேறொன்றையும் வெளிநாடுகளுக்கு இன்னுமொன்றையும் கூறுகின்றனர். உண்மையான தீர்வை வழங்க ஐக்கிய மக்கள் சக்தியான நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

தற்போது இந்த பிரச்னையை வெளியில் கொண்டு வந்து இனப்பிரச்னையை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

அதிகாரம் என்ற வார்த்தை தவறானது. வழங்கவேண்டியது அதிகாரத்தை அல்ல, பிரச்னைக்கான தீர்வையே வழங்க வேண்டும்-என்றார். (அ)

# வைத்தியர்களுக்கான கைவிரல் அடையாள பதிவை நீக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை

கொழும்பு, ஜூலை 29

எதிர்வரும் முதலாம் திகதி முதல் அமுலாகவிருந்த வைத்திய நிர்வாக சேவை அதிகாரிகளுக்கான கைவிரல் அடையாளம் இடும் கட்டாய நடவடிக்கையை நீக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் சமல் விஜேசிங்க தெரிவித்தார்.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் கைவிரல் அடையாளம் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக அறிவித்து வைத்திய நிர்வாக சேவை அதிகாரிகள் உள்ளிட்ட சிரேஷ்ட வைத்திய துறையை சேர்ந்தவர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

எனினும் குறித்த விடயமானது நடைமுறைக்கு சாத்திய மற்றது என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் அறிவித்திருந்தனர்.

அத்துடன் கைவிரல் அடையாள முறைமையானது வைத்திய துறையின் யாப்பில் பிரச்னைகளை உருவாக்கும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறித்த விடயத்தினை நீக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ளார் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் சமல் விஜேசிங்க தெரிவித்தார். (அ)

# எல்லை நிர்ணயக் குழு சமர்ப்பித்த பரிந்துரைகள் தற்காலிக நிறுத்தம்!

கொழும்பு, ஜூலை 29

முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தலைமையிலான உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணயக் குழு சமர்ப்பித்த அறிக்கையின் பரிந்துரைகளை அமுல்படுத்தும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கம்புர தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 8000 லிருந்து 4000 ஆக குறைப்பதற்காக, பிரதமரால் இந்தக் குழு நியமிக்கப்பட்டது.



குறித்த குழுவில் முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுடன், மேலும் 4 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர, குறித்த அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள முறைமையினால் நல்லிணக்க செயற்பாடுகள் பாரியளவில் பாதிக்கப்படும் எனக் குறிப்பிட்டார்.

அத்துடன், உள்ளூராட்சி நிறுவனங்கள் மேலும் சிக்கல் நிலைமைக்கு உள்ளாகும் என்றும் அவர் தெரிவித்தார். (அ)



# பட்டாசு வெடித்ததால் பற்றியெரிந்த வல்லை

யாழ்ப்பாணம், ஜூலை

அச்சுவேலி வல்லை இந்துமயான களப்பு பகுதியில் தீ விபத்து ஏற்பட்ட நிலையில் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டது.

அச்சுவேலி பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற மரண சடங்கின் இறுதி ஊர்வலத்தின்போது இளைஞர்களினால் வீசப்பட்ட பட்டாசு வெடி புற்தரவையில் விழுந்து தீப்பற்றிக் கொண்டது.

இதனால் குறித்த பகுதியின் பெரும்பாலான பற்றைக் காடுகள் தீயில் கருகி நாசமாகின.

இது தொடர்பில் பொது மக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய பிரதேச சபை பணியாளர்கள் மூலம் தீப்பரவல் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டது. (அ)

# தன் மீது வாள்வெட்டு மேற்கொண்ட திருடர்களை பந்தாடினார் முதியவர்!

வவுனியா, ஜூலை 29

வவுனியா, நொச்சிமோட்டையில் நேற்று முன் தினம் இரவு முகமூடி அணிந்த சிலர் வீடொன்றில் புகுந்து அங்கிருந்த தம்பதிகளான 58 வயதான மாரிமுத்து செல்வநாயகம் மற்றும் அவரது மனைவி செ. செல்வராணி மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அத்துடன் அந்த வீட்டில் திருடும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர். இதன்போது சுதாகரித்துக்கொண்ட வீட்டு உரிமையாளர் திடீரென வாளை திருடர்களிடம் இருந்து பறித்து அவர்கள் மீது பதில் தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதில் காயமடைந்த திருடர்கள் அங்கிருந்த தொலைபேசி ஒன்றை மாத்திரம் எடுத்து விட்டு தப்பியோடியுள்ளனர்.

இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# 25,000 வீடுகளுக்கு சூரிய மின் தகடுகள்



கொழும்பு, ஜூலை 29

கிராமப்புறங்களில் 25 ஆயிரம் வீடுகளை நிர்மாணித்து அந்த வீடுகளின் கூரைகளில் சூரிய மின் தகடுகளை நிறுவும் திட்டத்தை ஆரம்பிக்க எதிர்பார்பதாக மின் மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுவதாக அவர் தமது ருவிட்டர் கணக்கில் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் குறித்த சூரிய மின் தகடுகளில் இருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரமும் தேசிய மின் கட்டமைப்பில் இணைக்கப்படும் என அவர் மேலும் கூறினார். (அ)

# ரயில் திணைக்களத்தை அதிகார சபையாக்காதீர்!

## தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 29

ரயில் திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றுவதற்கு போக்குவரத்து அமைச்சர் எடுத்துள்ள தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக ரயில் தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அகில இலங்கை ரயில்வே பொது சேவையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஐ.ஏ. டி. பெரேரா இந்த விடயத்தை தெரிவித்தார்.

ரயில் திணைக்கத்தை அதிகார சபையாக மாற்றுவதற்கு முன்னர் பருவகால பயணச் சீட்டு இரத்து செய்யப்பட மாட்டாது என மக்களுக்கு வாக்குறுதி வழங்கவேண்டும் என அவர் குறிப்பிட்டார். (அ)

# 13ஐ தமிழர்கள் ஏன் பயன்படுத்த வேண்டும்?

## 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை முழுமையாக பயன்படுத்துவதன் மூலம் நிர்வாக திறனையும் ஆட்சித்திறனையும் வளர்க்கலாம்!

**13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தலும் இந்தியாவின் வகிபாகமும் என்ற தலைப்பில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் யாழ்.பல்கலைக்கழக சட்டபீடத் தலைவர் திருமதி கோசலை மதன் ஆற்றிய உரை**



**கோசலை மதன்**
(யாழ். பல்கலைக்கழக சட்ட பீடத் தலைவர்)

மாகாண சபை சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை தொடர்பாக இன்றைக்கு நாங்கள் கலந்துரையாட வேண்டிய தேவை இருக்கின்றதா என்று பார்க்கின்றபொழுது நிச்சமாக இருக்கிறது.

மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் இருந்தே அது அவசியமானதா இலங்கைக்கு அது பொருத்தமானதா? ஒற்றையாட்சிப்பண்பை அது மீறுகிறதா? எங்களுக்கு இது தேவையா? என்கின்ற கேள்வி குறிப்பாக தெற்கில் இருந்து எழுந்துகொண்டிருக்கிறது.

இன்றைக்கு அந்தக் கேள்வி மேலும் ஆழமான தன்மையிலே வடிவம் எடுத்திருக்கின்றது.

மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட பொழுது இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையிலே மாகாண சபை அறிமுகப்படுத்தப்பட்டபோது சில நிபந்தனைகள் அங்கே உள்வாங்கப்பட்டிருந்தன.

அந்த நிபந்தனைகள் முற்றிலுமாக மீறப்பட்டிருக்கக் கூடிய சூழ்நிலையிலே மாகாண சபைகளை தொடர்ந்தும் நடைமுறையில் வைத்திருப்பதானது அரசியல் அமைப்பிற்கு எதிரானது என்கிற வாதம் இன்றைக்கு மேலெழுந்திருக்கிறது.

இந்த வாதத்தின் அடிப்படையில் இணைக்கப்பட்டிருந்த வடக்கு கிழக்கு மாகாண சபை பிரிக்கப்பட்டது என்பதையும் நாங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஆகவே மாகாண சபையை தொடர்ந்து நடைமுறைப் படுத்த வேண்டிய தேவை தொடர்பான பாரிய கேள்வி, குறிப்பாக தெற்கிலே எழுந்திருக்கக்கூடிய சூழ்நிலையிலே இந்த சலனத்தின் பின்னணியில் மாகாண சபை தேர்தல் தொடர்ச்சியாக இழுத்தடிக்கப்பட்டிருக்கிற சூழ்நிலையிலே மாகாண சபை சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டிய தேவை பற்றி நாங்கள் நிச்சயமாக பேச வேண்டிய தேவை இருக்கின்றது.

இங்கே இன்னொரு விடயத்தையும் நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும். கூட்டத்திற்கு தலைமைதாங்கும் தலைவர் அவர்கள் (பேராசிரியர் எஸ். பத்மநாதன்) மிக தெளிவாக சொன்னபடி மாகாண சபை என்பது தழிழர்கள் விரும்பி ஏற்றுக்கொண்ட அரசியல் தீர்வு அல்ல.

50 இற்கு 50 என்பது முதலாக சமஷ்டி வரையாக தமிழர்கள் பல்வேறு வகையான அரசியல் தீர்வு முன்மாதிரிகளை முன்வைத்து தோற்றுபோன நிலைமையில் தான் இந்திய அரசாங்கத்தினுடைய அதி உச்ச அழுத்தத்தின் பயனாக மாகாண சபை இலங்கை நிர்வாகத்திற்குள் திணிக்கப்பட்டது.

ஆகவே மாகாண சபை என்பது இலங்கை தமிழர்களுடைய பிரச்சினைக்கான முழுமையான தீர்வு என்கின்ற தன்மையிலே இங்கு கலந்திருக்கக்கூடிய எவரும் தங்களுடைய வாதங்களை முன்வைப்பதற்கு வாய்ப்பில்லை.

ஆனால் மாகாண சபை என்பது பல முயற்சிகள் தோல்வியடைந்திருந்த பின்னணியிலே உள்வாங்கிக்கொள்ளப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு செயற்பாடு.

சமஸ்டி தொடர்பான தெளிவான சிந்தனை எங்களுடைய அரசியல் தலைவர்கள் மத்தியிலே ஆரம்பத்தில் இருந்தே இருந்து வந்தது.

இலங்கைக்கான அரசியல் அமைப்புக்களை உருவாக்குவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட காலத்தில் இருந்து சமஷ்டிக்கான இறுக்கமான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

72ஆம் ஆண்டினுடைய முதலாம் குடியரசு அரசியல் யாப்பாக இருக்கட்டும் 78ஆம் ஆண்டினுடைய 2ஆம் குடியரசு அரசியல் யாப்பாக இருக்கட்டும் இந்த அரசியல் யாப்புகளை உருவாக்குகின்ற செயற்பாடுகள் இடம்பெற்ற காலப்பகுதியிலே சமஸ்டிக்கான தேவைப்பாடு தமிழர் மத்தியில் இருந்து மிகத் தெளிவாக சொல்லப்பட்டது.

இந்த தேவைப்பாடு மிக தெளிவான முறையிலே உதாசீனம் செய்யப்பட்டு இந்த இரண்டு அரசியல் அமைப்புக்களிலும் தெளிவாக இலங்கை ஒற்றையாட்சி நாடு என பிரகடனப்படுத்தப்பட்ட தன்மையை நாங்கள் அறிவோம்.

78ம் ஆண்டு அரசியல் அமைப்பினுடைய உறுப்புரை இரண்டிலே காணப்படுகின்ற ஒற்றையாட்சி என்பதை நீக்கி உள்ளடக்க ரீதியாக தத்துவார்த்த அடிப்படையிலே சமஸ்டிப்பண்புகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கான செயற்பாடுகள் நீண்டகாலமாக இடம்பெற்றுவந்தன. இப்போதும் புதிய அரசியல் அமைப்பொன்றை உருவாக்குவதற்கான செயற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன.

> **தமிழர்களுடைய கலாசார சமூக பொருளாதார கட்டமைப்புக்களை சீர்செய்யக்கூடிய வகையிலே மாகாண சபை சட்டத்திலும் 13வது சபை திருத்தச் சட்டத்திலும் ஏற்பாடுகள் இருக்கின்றன**

ஆனால் ஒற்றையாட்சி என்கின்ற பதத்தை அரசியல் அமைப்பில் இருந்து நீக்குவோமாக இருந்தால் அரசியல் அமைப்புக்கான ஆதரவு கிடையாது என்பதான தெளிவான நிலைப்பாட்டோடு தெற்கு இருக்கிறது அதை நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

சமஸ்டி என்பதை தெளிவாக ஏற்று அங்கிகரிக்கின்ற அரசியல் அமைப்பொன்று உடனடியாக இலங்கையில் உருவாகின்ற சாத்தியம் இல்லை என்பதையும் நாங்கள் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

இந்த பின்னணியிலே தான் 13வது திருத்த சட்டத்தையும் மாகாண சபை திருத்தச் சட்டத்தையும் நாங்கள் மீள்பார்வை செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது.

தமிழர்களுக்கான தேவைகள் குறிப்பாக யுத்தத்திற்கு பின்னர் அதிகரித்திருக்கின்ற சூழ்நிலையிலே தமிழர்களை பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் கட்டியமைக்கக்கூடிய செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடிய வாய்ப்பாக இப்போது எங்கள் முன்னால் இருப்பது மாகாண சபைகள் மாத்திரம் தான்.

தமிழர்களுடைய கலாசார சமூக பொருளாதார கட்டமைப்புக்களை சீர்செய்யக்கூடிய வகையிலே மாகாண சபை சட்டத்திலும் 13வது சபை திருத்தச் சட்டத்திலும் ஏற்பாடுகள் இருக்கின்றனவா என பார்த்தால் அதற்கான வழி மாகாண சபைச் சட்டத்திலும் 13-வதுதிருத்த சட்டத்திலும் ஏற்பாடுகள் இருக்கின்றது.

அதனைப் பற்றி சுருக்கமான அறிமுகத்தை நான் தர விரும்புகின்றேன். சட்ட ஏற்பாடு விடயங்களை நாங்கள் தெளிவாக பார்க்க வேண்டும். மாகாண சபைகள் சுயாதீனமாக இயங்கக்கூடிய அமைப்புகள் அல்ல. இது நான் கூறவில்லை. மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்ட போது இலங்கை ஒற்றை ஆட்சி அமைப்புக்கு எதிரானது மாகாண சபையை அமுல்படுத்துவதை தடை செய்யமாறு கோரி உயர் நீதிமன்றத்தின் முன்னர் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டபோது அந்த காலப்பகுதியிலே இந்த மாகாண சபையானது ஒற்றை ஆட்சிக்கு எதிரானது அல்ல என்பதான தீர்ப்பை வழங்கி மாகாண சபை முறை அமுல்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய தேவை எங்கள் நீதிமன்றத்திற்கு இருந்தது.

இதன் காரணமாகவோ என்னவோ அப்போதைய அந்த நீதிமன்ற குலாம் மாகாண சபைகள் துணைநிலை அமைப்புகள் தான் என்பதான தெளிவான நீதிமன்ற தீர்ப்பை தந்திருந்தன.

ஆகவே மாகாண சபைகள் மத்திய அரசாங்கத்தினுடைய பல்வேறு துறைகளின் கட்டுப்பாட்டுக்கு கீழ் இயங்க வேண்டிய சூழ்நிலை தான் இப்போதும் எங்களுடைய அரசியல் யாப்பில் இருக்கின்றது.

பல்வேறு சந்தர்ப்பங்களிலே மாகாண சபைகள் மத்திய அரசாங்கத்தின் பாராளுமன்றத்திற்கும் நிர்வாக துறைக்கும் கட்டுப்பட்டு கீழ்ப்படிந்து தன்னுடைய செயற்பாடுகளை செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது.

இதனை விளங்கிக் கொண்டு நாங்கள் மாகாண சபை சட்டங்களை பார்க்கின்றபோது அல்லது 13-வது திருத்தச் சட்டத்தினை பார்க்கின்றபோது எங்கெங்கெல்லாம் மாகாண சபைகள் ஓரளவுக்கு என்னும் சுயாதீனமாக இயங்க முடியும் என்பதனை நாங்கள் பார்த்து கொள்ள முடியும்.

### 37 விடயங்கள் தொடர்பில் மாகாண சபைகள் சட்டமாக்கலாம்!

மாகாண சபை சட்டத்தின் அல்லது 13-ஆம் திருத்தச் சட்டத்தின் ஒன்பதாவது நிரலை பார்க்கின்றபோது முதலாவதாக மாகாண நிரல் என்கின்ற ஏற்பாடு காணப்படுகின்றது. அந்த நிரலின் கீழ் 37 விடயங்கள் தொடர்பில் மாகாண சபைகள் சட்டமாக்கக்கூடிய ஏற்பாடுகள் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

அந்த 37 விடயங்கள் எங்களுடைய இன்றைய தேவைப்பாடுகளை திருப்தி செய்யக்கூடிய வகையிலே சில ஏற்பாடுகளை செய்வதற்கான வழியினை ஏற்படுத்தி தந்திருக்கின்றது.

உதாரணமாக விவசாயம், கம நல சேவைகள், உள்ளூர் அதிகார சபை இப்படியான விடயங்களிலே கல்வி முதலான விடயங்களிலும் கூட மாகாண சபைகள் சட்டங்களை ஆக்குவதற்கான அதிகாரங்களை கொண்டிருக்கின்றது.

ஆனால் எங்களுடைய நடைமுறை அனுபவத்தின் விளைவாக இந்த மாகாண சபையினுடைய சட்டமாக்கல் விவகாரத்திலே ஆளுநருக்கு இருக்கின்ற அதிகாரம் தொடர்பிலான சில கேள்விகள் எங்களிடம் ஏற்படுகின்றது.

மாகாண சபை ஒரு நியதி சட்டத்தினை ஆக்குகின்றபோது அந்த நியதி சட்டத்திற்கு மாகாண சபையினுடைய ஆளுநர் ஒப்புதல் வழங்க வேண்டிய தேவை இருக்கின்றது.

மாகாண சபையினுடைய ஆளுநர் வேண்டுமென்றே ஒப்புதல் வழங்க மறுக்கின்றபோது குறிப்பிட்ட மாகாண சபை குறித்து நியதி சட்டங்களை ஆக்குவதில் பாரிய இடர்பாடுகளை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

(09ஆம் பக்கம் பார்க்க)

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன் காரணமாகத்தான் பல விடயங்களிலே மாகாண சபைகள் சட்டமாக்க முடியாமல் போன சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கின்றது.

### மாகாணங்களுக்கான விடயங்களில் பாராளுமன்றம் சட்டம் ஆக்குவதற்கு மாகணங்களின் அனுமதி தேவை!

ஆகவே அரசியல் சட்டத்தினை தெளிவாக பார்க்கும் போது மாகாண சபை நிரலிலே காணப்படுகின்ற விடயங்கள் தொடர்பிலே மாகாண சபைகள் சட்டமாக்க முடியும். மாகாண நிரலிலே காணப்படுகின்ற விடயங்கள் தொடர்பிலே மத்திய அரசாங்கத்தினுடைய பாராளுமன்றம் சட்டமாக்க முடியாதா என்கின்ற கேள்வி உங்களுக்கு எழலாம். சட்டமாக்க முடியும். மாகாண நிரலில் காணப்படுகின்ற விடயங்கள் தொடர்பிலே மத்திய பாராளுமன்றம் பாராளுமன்றத்தில் சட்டமாக முடியும். ஆனால் சட்டமாக்குவதற்கு முன்னர் மாகாண சபையோடு கலந்து ஆலோசித்து மாகாண சபையின் ஒப்புதலை பெற்ற பின் தான் மாகாண நிரலில் உள்ள விடயங்களுக்கு பாராளுமன்றம் சட்டமாக்க முடியும்.

மாகாண நிரலில் உள்ள விடயங்களிலே பாராளுமன்றம் விசேட பெரும்பான்மையுடன் சட்டமாக்குகின்ற போது அந்த பாராளுமன்ற சட்ட ங்கள் ஒப்புதல் அளிக்காத மாகாண சபைக்கு ஏற்புடையதாகாது என்பதான ஒரு ஏற்பாடும் 13 வது திருத்த சட்டத்திலே காணப்படுகின்றது.

இன்னும் ஒரு வெளி இருக்கின்றது. மாகாண நிரலில் இருக்கின்ற சில விடயங்கள் மூன்றாவது நிரலாகிய ஒருங்கிய நிலையில் காணப்படுகின்றது.

ஒருங்கிய நிரலில் காணப்படுகின்ற விடயங்களில் மாகாண சபையும் சட்டமாக்க முடியும் பாராளுமன்றமும் சட்டமாக்க முடியும். இந்த இரண்டு அமைப்புகளும் சட்டமாக்குகின்ற பொழுது இரண்டு சட்டங்களுக்கு இடையே வேறுபாடுகள் இருக்கின்றபோது குறிப்பாக இந்த உள்ளூர் அதிகார சபை தொடர்பிலே பாராளுமன்றத்திலேயே உருவாக்கப்பட்ட சட்டம் உள்ளது. இப்பொழுது மாகாண சபை அந்த விடயம் தொடர்பிலே மாகாண சபை சட்டத்தை உருவாக்க விரும்புகின்றது. இரண்டு சட்டங்களுக்கும் இடையிலே ஒரு முரண்பாடு உருவாகின்ற போது அந்த முரண்பாடு தொடர்பாக மாகாண நியதி சட்டத்தினுடைய ஏற்பாட்டிலே தெளிவாகச் சொல்லப்படுகின்றது.

குறிப்பிட்ட மாகாண சபையிலே அந்த பாராளுமன்ற சட்ட ஏற்பாடுகள் ஏற்புடையதாகாது என்பதன் ஒரு தெளிவான ஏற்பாடு எங்களுடைய அரசியல் சட்டத்தில் இருக்கின்றது.

ஆகவே மாகாண சபைகள் தனக்கு வழங்கப்பட்ட விடயங்களை சட்டமாக்குகின்ற பொழுது அந்த சட்டங்கள் மிக உயர்ந்தவையாகவும் பாராளுமன்ற சட்டத்திற்கு மேலானவையாகவும்பார்க்கப்படுகின்ற விதத்திலே எங்களுடைய 13 வது திருத்த சட்டத்தில் சில ஏற்பாடுகள் இருக்கின்றன. இந்த ஏற்பாடுகளை எங்களுக்கு சாதகமாக பயன்படுத்த வேண்டும். இதனை சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

பல விடயங்களில் நாங்கள் நியதி சட்டங்களை ஆக்க வேண்டிய தேவையுள்ளது.

உட்கட்டமைப்பு சார் விடயங்களிலே வடக்கு மாகாணத்திற்கு மாத்திரமல்ல ஏனைய மாகாணங்களுக்கும் பல சட்டங்களை ஆக்க வேண்டிய தேவையுள்ளது. ஆகவே நான் மேலே கூறிய நியமங்களை பயன்படுத்தி இயன்ற அளவு அதிகளவு நியதிசட்டங்களை எங்களுடைய மாகாண சபைகள் ஆக்க முடியும்.

### ஆளுநர் அனுமதி தர மறுத்தால் உயர்நீதிமன்றை நாடலாம்!

மாகாண சபைகளினுடைய நியதிச் சட்ட செயற்பாடுகளிலே ஆளுநர் தலையிடுகின்ற போது ஆளுநர் வேண்டுமென்றே அனுமதி தர மறுக்கின்றபோது அதற்கு என்ன செய்யலாம் என்பது தொடர்பிலே 13 வதுதிருத்தச் சட்டத்தில் சில ஏற்பாடுகள் இருக்கின்றன.

இரண்டாவது முறையாகவும் மாகாண சபை தன்னுடைய கோரிக்கையினை ஆளுநருக்கு அனுப்பி ஆளுநர் ஏற்றுக்கொள்ள மறுத்து நியதி சட்டத்தை நிறைவேற்றாமல் இழுத்தடிப்பு செய்தால், 13 வதுதிருத்த சட்டத்தினுடைய அரசியல் அமைப்பு தன்மை தொடர்பில் முதலில் ஜனாதிபதிக்கும் பின்னர் உயர் நீதிமன்றத்திற்கும் அனுப்பி உயர்நீதிமன்றத்தின் ஆலோசனையின் பேரிலே குறிப்பிட்ட நியதி சட்டத்திற்கு அனுமதி வழங்குவது தொடர்பிலே ஆளுநரருக்கு பணிக்கமுடியும். இவ்வாறான செயற்பாடு அரசியலமைப்பிலே காணப்படுகின்றது.

ஆளுநர் நீண்ட காலமாக ஒரு நியதி சட்டத்திற்கு அனுமதி அளிக்க மறுத்தால் அரசியல் அமைப்புச் சட்டத்தை பயன்படுத்தி உயர்நீதிமன்றத்தின் ஆலோசனையினை பெற்று குறிப்பிட்ட நியதி சட்டத்திற்கான ஆலோசனை அதாவது அரசியலமைப்புக்கு அமைவானதாக இருக்கின்ற போது உயர்நீதிமன்றத்தின் மூலம் அந்த நியதி சட்டத்திற்கான அனுமதியினை நாங்கள் பெற முடியும்.

இந்த வாய்ப்புகளினை நாங்கள் எங்களுடைய மாகாண மட்டத்தில் நிர்வாக கட்டமைப்புகளில் பயன்படுத்திக் கொள்ள முடியும். எனவே எங்களுடைய விவகாரம் சார்ந்த எங்களுடைய தெளிவான ஏற்பாடுகளை எங்களுக்கானதாக உருவாக்கிக் கொள்ள முடியும். இது மாகாண நிரல் சார்ந்து மாகாண சபைக்கு இருக்கக்கூடிய நியதி சட்ட அதிகாரம்.

பொதுவாக மாகாண சபை என்று பேசுகின்ற போது மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரமில்லை காணிஅதிகாரம் இல்லை என்பதான சில கருத்துகள் எங்கள் மத்தியிலே காணப்படுகின்றது.

### முழுமையாக இல்லாவிட்டாலும் காணி பொலிஸ் அதிகாரம் உண்டு!

முழுமையான பொலிஸ் அதிகாரம் காணி அதிகாரம் மாகாண சபைகளுக்கு இல்லை என்பதனை நானும் ஏற்றுக் கொள்கின்றேன்.

ஆனால் குறிப்பிட்டளவு அல்லது சில சொற்ப விவகாரங்களிலே மாகாண சபைக்கு அதிகாரம் உண்டு.

மாகாண பொலிஸ் அமைப்பு ஒன்றை உருவாக்கி செயற்படுத்துவதற்கான அதிகாரம் மாகாண சபைக்குள்ளது. ஒவ்வொரு மாகாண சபைக்கும் பிரதி பொலிஸ்மா அதிபரை நியமிப்பதற்கான அதிகாரம் இருக்கின்றது.

பிரதி பொலிஸ்மா அதிபரை தெரிவு செய்கின்ற தெரிவின் போது முதலமைச்சரின் அங்கீகாரத்தினை பெற வேண்டிய தேவை பொலிஸ் மா அதிபருக்குள்ளது. எனவே மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவில் மாகாண முதலமைச்சர் ஒப்புதல் அளிக்கின்ற ஒருவரை தான் மாகாண பிரதிபொலிஸ்மா அதிபராக நியமிக்க முடியும்.

ஆகவே மாகாணங்களிலே போலிஸ் கட்டமைப்பை உருவாக்குவதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான வழி 13-வது திருத்தச் சட்டத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த மாகாண அலகிலே மத்திய பொலிஸை சேர்ந்த உறுப்பினர்களும் பணியாற்றுவதற்கான வாய்ப்பு உள்ளது. மாகாண மட்டத்தில் உறுப்பினர்களை நியமிப்பதற்கான அனுமதி மாகாண பொலிஸ் ஆணைக் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் மாகாண பொலிஸ் ஆணைக் குழு எந்த அளவிற்கு செயற்பட முடியும் என சில மட்டுப்பாடுகள் உள்ளது. குறிப்பாக தேசிய பாதுகாப்பு மற்றும் வெளிவிவகார விடயம் தொடர்பிலே மாகாண பொலீஸ் ஆணைக் குழுவுக்கு ஒரு சில வரையறை உண்டு.

ஆனால் மாகாண மட்டங்களிலே அல்லது மாகாணங்களுக்குள் இடம் பெறுகின்ற அமைதிக்கு பங்கம் விளைவிக்கின்ற செயற்பாடுகளை கண்டித்து ஒழுங்கு செய்கின்ற அல்லது அமைதிப்படுத்துகின்ற அதிகாரம் மாகாண போலீஸ் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே இப்படியாக ஆரம்ப நிலையிலிருந்து ஒரு மாகாண போலீஸ் அலகினை உருவாக்கி மாகாண சட்ட ஒழுங்கினை உருவாக்கிக் கொள்வதில் நாங்கள் கரிசனை காட்டிக்க வேண்டிய தேவை உள்ளது.

அதிலே இருக்கக்கூடிய முட்டுக்கட்டைகளை தடைகளை தாண்டுவதற்கான பயிற்சியும் ஒழுங்குபடுத்தலும் எங்களுக்கு தேவைப்படுகின்றது. அவ்வாறுதான் இந்த அரச காணி தொடர்பிலும் மாகாண சபைகளுக்கு சில அதிகாரம் உள்ளது அரசியலமைப்பு தெளிவாக ஒரு ஏற்பாட்டினை செய்திருக்கின்றது.

மாகாண நிரலில் இருக்கக்கூடிய விடயங்கள் தொடர்பில் சில செயற்பாடுகளுக்காக ஒரு மாகாணத்தில் இருக்கின்ற அரச காணி தேவைப்படுகின்ற போது நிச்சயமாக அந்த மாகாண சபை அந்த அரச காணியை பயன்படுத்தலாம். ஒரு விடயத்திற்காக மத்திய அரசாங்கத்திற்கு மாகாண காணி தேவைப்படுகின்றது என்றால் அது பயன்படுத்தலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே மத்திய அரச விவகாரம் ஒன்றுக்காக மாகாண காணி தேவைப்படுவதாக இருந்தால் அதனை பயன்படுத்துவதற்கான தன்மை தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே இந்த வழிகளை பயன்படுத்தி நாங்கள் எங்களுடைய 13 வதுதிருத்தச் சட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பது மூலமாக நாங்கள் எதை அடைய முடியும் என்ற கேள்விகளுக்கெல்லாம் என்னிடம் இருக்கக்கூடிய பதில் இது தான்.

நாங்கள் பலவிதத்தில் பலராலும் பாரபட்சப்படுத்தப்பட்ட ஒரு சமூகம். நாங்கள் எப்படி பலராலும் பாரபட்சப்பட்டோமோ அவ்வாறான பாரபட்சத்தை எங்களுடைய சமூகத்தின் மத்தியில் எங்களுக்கு கீழ் இருக்கக்கூடியவர்கள் மீது திணிக்கின்ற ஒரு கட்டமைப்பும் சமூக கட்டமைப்பும் எங்களிடம் இருக்கின்றது.

ஆகவே சமத்துவமாக நடத்துவதற்கு எங்களை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு சுயாட்சிக்கான தன்னாட்சிக்கான அதிகாரம் கொண்டவர்களாக எங்களை தயார் படுத்திக் கொள்வதற்கும் மாகாண சபை முறைமையில் காணப்படுகின்ற அதிகாரங்களை நாங்கள் முழுமையாக பயன்படுத்த பழகிக்கொள்ள வேண்டும்.

மாகாண சபை சட்டத்தின் கீழ் 13-வது திருத்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை முழுமையாக பயன்படுத்த எத்தணிப்பதன் மூலமாக எங்களுடைய நிர்வாக திறனையும் ஆட்சித்திறனையும் நாங்கள் அதிகரித்துக் கொள்ள முடியும். வினைத்திறனாளாக ஆக்கிக் கொள்ள முடியும்.

ஆகவே இன்றைக்கு இருக்கக்கூடிய சாத்தியமானதாக அல்லது அணுகக் கூடியதாக இருக்கக் கூடியதாக இந்த 13 வது திருத்த சட்டத்தினை பயன்படுத்திக் கொண்டு எங்களுடைய பிரச்சனைகளுக்கான அதிர்வுச்ச தீர்வாக இருக்குமோ அதனை நோக்கியும் எங்களுடைய நகர்வுகளை நகர்த்த வேண்டிய தேவை உள்ளது.

சமஸ்டி எங்களுக்குரிய பொருத்தமான தீர்வு என்பதிலே இங்கே இருக்கக்கூடிய யாருக்கும் மாற்று கருத்து இருக்க வாய்ப்பு இல்லை.

எனவே இந்த சமஸ்டியை அடைவதை நோக்கிய எங்களுடைய செயல்பாடு எவ்வாறு இருக்க வேண்டும் சமஸ்டியை எவ்வாறு நடைமுறைப்படுத்தப் போகின்றோம் சமஷ்டி கோரிக்கையை சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்கின்ற வகையிலே அவர்களுக்கு தெளிவுபடுத்தல்களை செய்வதற்குரிய திட்டங்கள் என்ன. இவ்வாறான விடயங்களிலும் நாங்கள் எங்களை தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

நான் அறிந்த வரைக்கும் வடக்கிலே இருப்பவர்கள் வடக்கு கிழக்கு இணைந்த மாகாணமாக இருக்க வேண்டும் என்று தெரிவித்து வருகின்றார்கள்.

ஆனால் கிழக்கு மாகாணத்தில் இருப்பவர்கள் வடக்கோடு இணைய தயாராக இல்லை. இன்றைக்கும் எங்களுடைய 13-வது திருத்தச் சட்டத்தின் கீழாக வடக்கையும் கிழக்கையும் இணைப்பதற்கான சட்ட ஏற்பாடு உள்ளது. அந்த அதிகாரம் பாராளுமன்றத்திற்குள்ளது. இணைந்த மாகாணங்களை தொடர்ச்சியாக இணைத்து வைத்திருப்பதற்கான செயற்பாடுகளை செய்வதற்கான அதிகாரமும் பாராளுமன்றத்துக்குள்ளது.

ஆகவே வடக்கு கிழக்கு சட்டரீதியாக இணைக்கப்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. ஆனால் வடக்கு கிழக்கு இணைவதை வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கின்ற மக்கள் விரும்புகிறார்களா என்பதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

கிழக்கில் இருக்கின்ற மக்கள் அதற்கு தயாராக இல்லை என்றால் வடக்கு கிழக்கும் தமிழரின் தாயகம் என்கின்ற கோட்பாட்டை நாங்கள் தொடர்ந்தும் செயற்படுத்த விரும்புகின்றோமாக இருந்தால் கிழக்கு மக்களை எங்களோடு இணைத்துக் கொள்வதற்கான செயற்பாடுகளை நாங்கள் ஆரம்பிக்க வேண்டும்.

இந்த செயற்பாட்டினை நாங்கள் எப்போதோ ஆரம்பித்திருக்க வேண்டும். ஆனால் நான் அறிந்த வரையில் இப்பொழுதும் அதற்கான திட்டம் எதுவும் எங்களிடத்தில் இல்லை.

ஆகவே இவ்வாறான ஒரு எதிர்கால அரசியல் தீர்வுகள் நோக்கிய எங்களுடைய பாதையை அல்லது பார்வையை அகலப்படுத்தி ஆளப்படுத்தி சமஸ்டியையோ அல்லது சமஸ்டி சார்ந்த ஏதேனும் ஒரு அரசியல் அமைப்பு மாற்றத்தினை உருவாக்குகின்ற எங்களுடைய செயற்பாடுகளையும் நாங்கள் ஆழமாக வடிவமைத்துக் கொள்ள வேண்டிய அதேவேளை இப்போது எங்கள் கைகளில் இருக்கின்ற மாகாண சபை முறைமையை முழுமையாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்திக் கொண்டால் நாங்கள் எதிர்காலத்தில் அடைய நினைக்கின்ற அதிகாரம் எங்களுடைய கைகளில் வருகின்றபோது அதனை வினை திறனாக செயல்படுத்துவர்களாக நாங்கள் மாறுவோம்.

இப்போது இருப்பவற்றை சரியாக பயன்படுத்தத் தெரியாதவர்களாக நாங்கள் அடையாளப்படுத்தப்படுவோமாக இருந்தால் எங்களுக்கு மேலும் அதிகாரங்களை தருவதற்கான விருப்பம் யாருக்கும் வராது. இருப்பவற்றை சரியாக பயன்படுத்திக் கொண்டு இல்லாதவற்றை நியாயப்படுத்தி பேசுவதாக கேட்பவர்களாக நாங்கள் எங்களை தகைமைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அந்த செயற்பாட்டின் அடித்தளமாக நிச்சயமாக 13 வது திருத்த சட்டம் இருக்கும் 13 வது திருத்தச் சட்டத்தின் மூலமாகபல நியதி சட்டங்களை ஆக்க முடியும்.

இந்த நியதி சட்டங்கள் மூலமாக எங்களுடைய சமூகம் குறிப்பாக போருக்கு பின்னரான எமது சமூகத்தின் பொருளாதார சமூக மாற்றங்களை நாங்கள் சீர் செய்ய முடியும்.

இதன் மூலமாக நாங்கள் அடுத்த கட்ட அரசியல் தீர்வுகளை நோக்கி நகர முடியும் என்று நினைக்கின்றேன்.

எனவே இந்த தயார் படுத்தலுக்கான அடித்தளமாக 13-வது திருத்தச் சட்டத்தினை பயன்படுத்திக்கொண்டு தெளிவான தன்மையோடு ஒற்றுமையான தன்மையோடு எங்களுடைய அரசியல் செயல்நெறி அமையுமாக இருந்தால் தமிழினம் இன்னும் ஆணித்தரமாகவும் இன்னும் நிலைநிறுத்திக் கொள்கின்ற இனமாகவும் மாறும் என்கின்ற நம்பிக்கை உண்டு.

●

# அமரகீர்த்தி அத்துக்கோரள படுகொலை; குற்றஞ்சாட்டப்பட்ட 37 பேருக்குப் பிணை

கொழும்பு, ஜூலை 29

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரளவின் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 37 பேர் கடுமையான பிணை நிபந்தனையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கம்பஹா மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாமினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் பொலநறுவை மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள கடந்த 2022 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆம் திகதி கொலை செய்யப்பட்டார்.

கடந்த வருடம் மே மாதம் 09 ஆம் திகதி காலிமுகத்திடலில் அரசாங்கத்தில் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை தொடர்ந்து நாட் டின் பல்வேறு பகுதிகளிலும் வன்முறைகள் இடம்பெற்றன.

இந்த நிலையில் அமரகீர்த்தி அத்துக்கோரள அலரிமாளிகைக்கு வருகை தந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் நிட்டம்புவ நகரில் வைத்து தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரளவின் பிரத்தியேக பாதுகாப்பு பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் குறித்த சந்தர்ப் பத்தில் கொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# ஜெரோமின் 11 வங்கி கணக்குகளில் வைப்பிலிடப்பட்ட 12 பில்லியன் ரூபா

கொழும்பு, ஜூலை 29

போதகர் ஜெரோம் பெர்னாண்டோவின் 11 வங்கிக் கணக்குகளை ஆராய்ந்ததில் மொத்தம் 12.2 பில்லியன் வைப்பில் உள்ளதாக சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பிரியந்த நவாணவினால் உயர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

எல்லே குணவன்ஸ தேரர் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை நேற்று காலை இடம்பெற்றபோதே, போதகர் ஜெரோம் பெர்னாண்டோவின் வங்கிக் கணக்குகளில் உள்ள பணம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டது.

ஜெரோம் பெர்னாண்டோ தனது சபைக்கு முன்பாக ஆற்றிய பிரசங்கம் தொடர்பான காணொளி ஒன்று சமூக ஊடகங்களில் அண்மையில் வெளியாகி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

குறித்த காணொளியில் புத்த பகவான் தொடர்பான அவரது கருத்துக்கள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

அதற்கமைய அவரை கைது செய்யுமாறு கோரி, புதிய பௌத்த முன்னணி என்ற அமைப்பு, கொழும்பு கோட்டையில் உள்ள குற்றப் புலனாய்வுப் திணைக்களத்திடம் முறைப்பாடு செய்துள்ளது.

குறித்த போதகருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி பிவித்துரு ஹெல உறுமயவும் குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் முறைப்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தொடர் கொள்ளையில் ஈடுபட்ட ஐவர் கைது!

திருமலை, ஜூலை 29

திருகோணமலை, மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஐவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை - மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தண்ணீர் மோட்டார் மற்றும் கையடக்க தொலைபேசிகள் களவாடப்பட்டுள்ளன என பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவை தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் பிரகாரம் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், களவாடப்பட்ட பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் திருகோணமலை ரொட்டவெவ பகுதியைச் சேர்ந்த 20 இற்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.



# சமூக நல்லிணக்க சிரமதான நிகழ்வு!

காரைதீவு, ஜூலை 29

காரைதீவு பிரதேச நல்லிணக்க குழுவும், காரைதீவு பிரதேச செயலகமும் இணைந்து எல்லை வீதியில் தமிழ் முஸ்லிம் மக்களிடையே முரண்பாட்டைத் தவிர்க்குமுகமாக சமூக நல்லிணக்க சிரமதானம் ஒன்றை மேற்கொண்டது.

இச்சிரமதானம் மாளிகைக்காடு காரைதீவு எல்லை வீதியான சித்தானைக்குட்டி ஆலயத்திற்கு செல்லும் வீதியில் அமைந்துள்ள கரைச்சைப் பாலப் பகுதியில் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இச் சிரமதான நிகழ்வில், காரைதீவு உதவி பிரதேச செயலாளர் எஸ்.பாத்தீபன், காரைதீவு பிரதேச சபையின் செயலாளர் அ. சுந்தரகுமார், சமாதானமும் சமூக பணியும் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் ரி.ராஜேந்திரன், கள இணைப்பாளர் பி.ரோஹிணி, காரைதீவு பிரதேச நல்லிணக்க குழு இணைப்பாளர் எம். ஐ. றியால், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தார்கள், நல்லிணக்கம் குழு அங்கத்தவர்கள் உட்பட கிராம தமிழ், முஸ்லிம் மக்களும் கலந்து கொண்டார்கள்.

இச் சிரமதான நிகழ்வில் மாளிகைக்காடு, காரைதீவு எல்லை பிரதேசங்களில் போடப்படும் திண்ம கழிவுகளால் ஏற்படும் முரண்பாடுகளை தடுக்கும் நோக்குடன் விழிப்புணர்வு பதாதை ஒன்றும் போடப்பட்டுள்ளது.

இதனால் இவ்வீதியில் தற்போது குப்பைகள் வீசப்படுவது வெகுவாக குறைந்துள்ளது.

இச் சிரமதான நிகழ்வில் காரைதீவு பிரதேச நல்லிணக்க குழு அங்கத்தவர்கள், காரைதீவு பிரதேச சபை, மதஸ்தலங்கள், சமூர்த்தி சங்கங்கள், கிராம மட்ட அமைப்புகள், விளையாட்டுக் கழகங்கள் போன்ற கலந்துகொண்டன. (அ)









# செப்ரெம்பர் மாதத்திலிருந்து நாடு பெரும் அபிவிருத்தி காண உள்ளது!

## ஜனாதிபதியை நம்புகிறோம் என்கிறார் முஷாரப் எம்பி.

**காரைதீவு, ஜுலை 29**

**"எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்திலிருந்து நாடு வங்குரோத்து அடையும் என்று எதிராளிகள் சொல்கிறார்கள். ஆனால் செப்ரெம்பர் மாதத்தில் இருந்து தான் நாடு பாரிய அபிவிருத்தியை காணவிருக்கின்றது. ஜனாதிபதியை நாங்கள் பூரணமாக நம்புகின்றோம்."**

**-இவ்வாறு அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் நேற்று வெள்ளிக்கிழமை காரைதீவில் இடம் பெற்ற பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.**

காரைதீவு பிரதேச செயலக அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரும் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.எம். முஷாரப் தலைமையில் காரைதீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இக் கூட்டத்தில், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், உதவி பிரதேச செயலாளர் பி. பார்த்தீபன், கணக்காளர் ஜனாபா தெஸ்மியா, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் பி.இராஜகுலேந்திரன், திணைக்களங்களின் பிரதிநிதிகள்,முப்படைகளின் பிரதிநிதிகள் பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்,

எதிர்த்தரப்பினர் கடந்த நான்காம் மாசம் பட்டினிச்சாவு வரும் என்றார்கள். இப்பொழுது செப்ரெம்பரில் நாடு வங்குரோத்து அடையும் என்கிறார்கள். இவற்றையெல்லாம் எதிர்கொண்டு எமது ஜனாதிபதி அவர்கள் இந்த நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பி வருகின்றார். அவர் ஒரு செயல் வீரன் .

அடுத்த நான்கு வருட காலத்திற்கு நாட்டுடுக்கு ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையும் கிடைத்திருக்கின்றது. கூடவே 3.5 பில்லியன் டொலர் கிடைக்க இருக்கின்றது .

எனவே நாட்டு மக்கள் அஞ்ச வேண்டிய அவசியம் இல்லை. செப்ரெம்பர் மாதத்தில் இருந்து அபிவிருத்தி சார் செயற்பாடுகளை நாங்கள் சாதாரணமாக மேற்கொள்ள முடியும். 2024 க்குரிய பட்ஜெட் மிகவும் சிறப்பாக அமைய இருக்கின்றது- என்றார்.

(அ)

# நேற்றைய ஹர்த்தாலை புறக்கணித்த திருமலை

திருமலை, ஜுலை 29

வடக்கு- கிழக்கில் ஹர்த்தாலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்தபோதிலும் திருகோணமலை மாவட்டத்தின் அனைத்து நடவடிக்கைகளும் வழமை போன்று இடம்பெற்றதை அவதானிக்க முடிந்தது.

கடைகள் மற்றும் வியாபார நிலையங்கள் திறந்திருந்ததையும், போக்குவரத்து வழமை போன்று நடைபெற்றதையும் காண முடிந்தது.

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் திருகோணமலை நகரில் ஹர்த்தாலுக்கான ஆதரவு குறைவாகவே காணப்பட்டது.

(அ)

## ஆசிரியரைத் தாக்கிய இரண்டு மாணவர்களையும் சீர்திருத்த பாடசாலையில் தடுத்து வைக்க உத்தரவு!

காரைதீவு, ஜுலை 29

அட்டாளைச்சேனையில் இடம்பெற்ற ஆசிரியர் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பான சந்தேகத்திற்குரிய மாணவர்கள் இருவரையும் அச்சுவேலி சிறுவர் சீர்திருத்த பாடசாலையில் இரு வாரங்கள் தடுத்து வைக்குமாறு அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம் எச். மொகமட் ஹம்சா உத்தரவிட்டார்.

சந்தேகத்திற்குரிய இரு மாணவர்களையும் அக்கரைப்பற்று பொலிஸார் கைது செய்து கடந்த 27 ஆம் திகதி அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்திருந்தனர்.

அட்டாளைச்சேனை மத்திய கல்லூரி இரு மாணவர்கள் ஆசிரியர் மீது தாக்குதல் ஆசிரியர் காயமடைந்த நிலையில் அக்கரைப்பற்று வைத்தியசாலையில் அனுமதி

கடந்த புதன்கிழமை அட்டாளைச்சேனை மத்திய கல்லூரியில் கற்பிக்கும் காரைதீவைச் சேர்ந்த திருநாவுக்கரசு கோகுலவாசன் என்ற ஆசிரியர் மீது அதே கல்லூரியில் உயர் தரம் கற்கும் இரு மாணவர்கள் , ஒரு மாணவரின் சகோதரர் மற்றும் மற்ற மாணவனின் பெற்றோர் ஆகியோரால் பாடசாலை முடிவடைந்த நேரத்தில் சரமாரியாக தாக்குதல் நடத்தப்பட்டது. தெரிந்ததே.

ஆசிரியரின் கண்ணில் காயம் ஏற்பட்டதில் அவர் தற்போது அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

குறித்த ஆசிரியரின் மடிக்கணினி, மோட்டார் வண்டி, மூக்குக்கண்ணாடி என்பன சேதமடைந்துள்ளன.

பாடசாலையின் ஒழுக்க கோவையை செயல்படுத்துவதில் எற்பட்ட முரண்பாட்டில் இத்தாக்குதல் நடை பெற்றதாக பாதிக்கப்பட்ட ஆசிரியர் தெரிவித்தார்

இதனையடுத்து நேற்றுமுன் தினம் பாடசாலை ஆசிரியர்கள் குறித்த ஆசிரியர் மீதான தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது வன்மையாக கண்டிக்கத்தக்க ஒரு செயல்.

தாக்குதல் நடத்தியவர்கள் சட்டத்தின் முன் தண்டிக்கப்பட வேண்டும் என்று சக ஆசிரியர்கள் குரல் எழுப்பினர்.

அக்கரைப்பற்று பொலிஸார் தலையிட்டு சந்தேகத்திற்குரிய இரு மாணவர்களையும் கைது செய்து மன்றில் ஆஜர்படுத்தினர்.

(அ)

# விளையாட்டுத்துறை அமைச்சர் அம்பாறை மாவட்டத்துக்கு விஜயம்




அம்பாறை, ஜுலை 29

அம்பாறை மாவட்டத்தின் விளையாட்டுத்துறை அபிவிருத்தி மற்றும் விளையாட்டுச் சங்கங்கள், வீர,வீராங்கனைகள் எதிர்நோக்கும் பிரச்னைகள், சவால்கள் குறித்து ஆராயும் கூட்டம் நேற்று முன் தினம் அம்பாறை மாவட்ட செயலகத்தில் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தலைமையில் இடம்பெற்றது

இதன்போது அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான விமலவீர திஸாநாயக்க,டாக்டர் திலக் ராஜபக்ஸ, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம மற்றும் மாவட்டத்திலுள்ள விளையாட்டு உத்தியோகத்தர்கள், பயிற்றுவிப்பாளர்கள், விளையாட்டு சங்கங்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்ட விளையாட்டுத்துறையில் முன்னணியில் திகழ்வதாகவும், பயிற்சிகளையும், எனைய வசதிகளையும் பெற்றுக்கொள்வதில் தாம் பெரிதும் பிரச்னைகளை எதிர்நோக்குவதாகவும் விளையாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் சங்கங்களின் பிரதிநிதிகள் இங்கு கருத்துத் தெரிவித்தனர்.

அத்தோடு விளையாட்டுத் துறை அமைச்சு விளையாட்டுத் துறை மேம்பாட்டுக்காக கூடுதலான நிதி உதவிகளை அம்பாறை மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த விளையாட்டுத்துறை அமைச்சர்,

அம்பாறை மாவட்டத்தின் விளையாட்டுத்துறை அபிவிருத்திக்காக கூடுதல் கவனம் செலுத்தப்படும் எனவும் விளையாட்டு வீரர்கள் மற்றும் விளையாட்டுச் சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளில் கவனம் எடுக்க வேண்டும்.

மாவட்ட மட்டத்தில் திறமையான இளம்வீரர்களை இனம் கண்டு அவர்களுக்கு போதிய பயிற்சிகளை வழங்குவதன் மூலம் நாட்டுக்காக சிறந்த வீரர்களை உருவாக்க முடியும். அதற்காக பயிற்சியாளர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் செயல்படவேண்டும்.

அம்பாறை மாவட்டத்தில் ரக்பி உட்பட பல விளையாட்டு சங்கங்கள் இல்லாமல் இருப்பதைக் காண்கின்றேன். எதிர்காலத்தில் அதற்குரிய சங்கங்களை அமைத்து அவ்விளையாட்டுக்களை வளர்தெடுக்க வேண்டும்- என்றார்.

(அ)

# நைஜர் ஜனாதிபதி கைது! ஐ. நா செயலர் கண்டனம்!!

நியூயோர்க், ஜூலை 29

**மேற்கு ஆபிரிக்காவின் நைஜர் நாட்டின் ஜனாதிபதி கைது செய்யப்பட்டுள்ளமைக்கு ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் கண்டனம் வெளியிட்டுள்ளார்.**

**அத்துடன் இவ்வாறான செயற்பாடுகள் ஜனநாயகத்துக்கு இடையூறு விளைவிக்கும் என்பதுடன் இது போன்ற ஜனாயகத்திற்கு விரோதமான செயற்பாடுகளை இராணுவத்தினர் உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.**

மேலுமம நைஜர் ஜனாதிபதி முகமட் பஸூமை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

நைஜரின் ஜனாதிபதி மொஹமட் பஸூமை அதிகாரத்தில் இருந்து அகற்றியதாக அந்த நாட்டு இராணுவத்தினர் அறிவித்தனர்.

நேற்று முன் தினம் புதன்கிழமை ஜனாதிபதியை, அவரது மெய்ப்பாதுகாவலர்கள் தடுத்து வைத்துள்ளதாக தகவல் வெளியான பின்னர் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தேசிய தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட ஒரு அறிக்கையில், கேணல் மேஜர் அமடூ அப்த்ரமானே, "பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புப் படைகள் உங்களுக்கு நன்கு தெரிந்த ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க முடிவு செய்துள்ளன" என்று கூறினார்.

நாட்டின் எல்லைகள் மூடப்பட்டுள்ளதாகவும், நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு அமலில் உள்ளதாகவும் அவர் கூறினார். நாட்டின் அனைத்து நிறுவனங்களும் இடைநிறுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

அப்த்ரமனே இந்த சதிப்புரட்சி அறிக்கையைப் படிக்கும் போது, சீருடை அணிந்த மற்ற ஒன்பது அதிகாரிகள் அவரின் பின்னால் வரிசையாக நின்றனர்.



நாட்டைப் பாதுகாப்பதற்கான தேசிய கவுன்சில் என்று தங்களை குறிப்பிட்ட இந்த குழு, எந்தவொரு வெளிநாட்டு தலையீட்டிற்கும் எதிராக எச்சரித்தது.

அப்த்ரமானே அறிவிக்கும் போது ஜனாதிபதி எங்கே இருந்தார் அல்லது அவர் ராஜினாமா செய்தாரா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

நியூசிலாந்தில் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் அன்ரனி பிளிங்கன், "நைஜரின் ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியாக அமெரிக்கா உறுதியுடன் ஆதரிக்கிறது என்பதை நான் இன்று காலை ஜனாதிபதி பஸூமுடன் பேசினேன். அவரை உடனடியாக விடுவிக்குமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்," என்று அவர் கூறினார்.

2020 முதல் மேற்கு மற்றும் மத்திய ஆபிரிக்கா பிராந்தியத்தில் நடந்த ஏழாவது இராணுவச் சதி இதுவாகும்.

நிலத்தால் சூழப்பட்ட முன்னாள் பிரெஞ்சு காலனியான நைஜர், ஆயுதமேந்திய குழுக்களை எதிர்த்துப் போராட உதவும் மேற்கத்திய சக்திகளுக்கு ஒரு முக்கிய கூட்டாளியாகும், மேலும் துணை-சஹாரா ஆபிரிக்காவில் இருந்து ஒழுங்கற்ற குடியேற்றத்திற்கு எதிரான போராட்டத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கிய பங்காளியாகவும் உள்ளது.

நைஜரில் அமெரிக்காவின் இரண்டு ட்ரோன் தளங்கள் உள்ளன. அங்கு சுமார் 800 அமெரிக்க துருப்புக்களும் நிலைகொண்டுள்ளனர். அவர்களில் சிலர் நைஜீரிய இராணுவத்திற்கு பயிற்சி அளித்து வரும் சிறப்புப் படைகள்.

அந்த குறிப்பிட்ட பிராந்தியத்தில் எஞ்சியிருக்கும் கடைசி அமெரிக்க கூட்டாளி நைஜராகும். அண்டை நாடான மாலி, புர்கினா பாசோவில் உள்ள அரசாங்கங்கள் இராணுவ சதிப்புரட்சிகளில் கவிழ்க்கப்பட்டன. இந்த இரண்டு நாடுகளிலும் அங்கிருந்த பிரெஞ்சு வீரர்களை வெளியேற்றிவிட்டு, ரஷ்யாவின் ஆதரவுப் படைகளின் பாதுகாப்பை பெற்றுள்ளன.

நைஜரிலும் இதே நிலைமையே ஏற்படலாம் என கருதப்படுகிறது. (அ)



# சிரியாவில் குண்டுவெடிப்பு: 6 பேர் பலி! 20 பேர் காயம்!!

டமஸ்கஸ், ஜூலை 29

சிரியாவின் தலைநகரில் உள்ள வழிபாட்டுத்தலம் ஒன்றில் குண்டு வெடிப்பு சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

ஷியா பிரிவினருக்கான இந்த வழிபாட்டு தலத்திற்கு தினமும் நூற்றுக்கணக்கானோர் வழிபாடு நடத்த வருகை தருகின்றனர்.

இந்த வழிபாட்டுத்தலம் அருகே நேற்று முன் தினம் குண்டு வெடிப்பு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த குண்டு வெடிப்பில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், 20 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

காரில் நிரப்பப்பட்ட குண்டுகள் வெடித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த குண்டு வெடிப்பு பயங்கரவாத தாக்குதல் என சிரியா உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. (அ)

# வட்டி வீதத்தை அதிகரித்த அமெரிக்க மத்திய வங்கி

நியூயோர்க், ஜூலை 29

அமெரிக்காவின் மத்திய வங்கி அதன் அடிப்படை வட்டி வீதத்தை 0.25 வீதமாக அதிகரித்துள்ளது.

அமெரிக்காவின் மத்திய வங்கியானது ஒவ்வொரு காலாண்டும் அடிப்படை வட்டி வீதத்தை நிர்ணயிக்கும்.

அதன்படி, அமெரிக்காவின் பணவீக்கம் தற்போது 3 வீதமாக இருந்து வரும் நிலையில், அதனை 2 வீதத்தை விடவும் குறைக்கும் நோக்கில் அமெரிக்க மத்திய வங்கி பல்வேறு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒரு தொடர்ச்சியாக அமெரிக்க மத்திய வங்கியின் அடிப்படை வட்டி வீதங்களை 0.25 வீதமாக அதிகரித்துள்ளது.

கடந்த 2001ஆம் ஆண்டிற்கு பிறகு, 22 வருடங்களாக முன்னெப்போதும் இல்லாத வகையில் இந்த வட்டி வீதம் அமைந்துள்ளது.

இந்த கால் வீத உயர்வு என்பது வங்கிகளின் கடன் வட்டி வீதத்தை 5.25 வீதத்திலிருந்து 5.5 வீதம் வரை கொண்டு செல்லும் என பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பிலான அறிவிப்பை அமெரிக்க மத்திய வங்கி தலைவர் ஜெரோம் பவல் வெளியிட்டுள்ளார். (அ)



# பிலிப்பைன்ஸ் ஏரியில் படகு கவிழ்ந்து விபத்து

## 30 பேர் உயிரிழப்பு

மணிலா, ஜூலை 29

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலா அருகே லகுனா ஏரியில் படகொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று அதிகாலை வேளையில் 70 பயணிகளை ஏற்றிச் சென்ற படகே இவ்வாறு விபத்துக்குள்ளானதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

குறித்த படகு தலைநகர் மணிலா தலிம் தீவுக்கு பயணித்துக்கொண்டிருந்த வேளையில், திடீரென ஏற்பட்ட பலத்த காற்றின் காரணமாக விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்பு குழுவினர், மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

இதன்போது 30 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்திருப்பதாகவும், இதுவரையில் 40 பேரை மீட்டிருப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கப்பெறும் தகவல்கள் தெரிவித்தன. (அ)

# வடகொரியத் தலைவரை சந்தித்த ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சர்

பியொங்யாங், ஜூலை 29

ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷோய்கு, வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன்னை சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பில் பிராந்திய பாதுகாப்பு மற்றும் இராணுவ விவகாரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக வடகொரியாவின் உத்தியோகபூர்வ ஊடகம் தெரிவித்துள்ளது.

1950-53 கொரியப் போர் முடிவடைந்து 70 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், கிம் உடனான ரஷ்ய பாதுகாப்பு அமைச்சரின் சந்திப்பு சர்வதேச கவனத்தைப் பெற்றுள்ளது.

பியொங்யாங்கில் நடந்த சந்திப்பில் செர்ஜி மற்றும் கிம் பல விடயங்களில் பரஸ்பர உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

கொரிய போர் நினைவை முன்னிட்டு நடத்தப்பட்ட இராணுவ மற்றும் ஆயுத அணிவகுப்பு பேரணிக்கு ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்ஜியை கிம் அழைத்துச் சென்றார்.

அணி வகுப்பில் வட கொரியாவால் அண்மையில் ஏவப்பட்ட ஏவுகணைகள் காட்சிப் படுத்தப்பட்டன. அவற்றை ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் நெருக்கமாக சென்று அவதானித்துள்ளார். (அ)

# சி.சி.ரி.வி. காணொலியை அழித்ததாக டொனால்ட் ட்ரம்ப் மீது குற்றச்சாட்டு!

நியூயோர்க், ஜூலை 29

அமெரிக்காவின் முன்னைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது மேலும் மூன்று புதிய குற்றச்சாட்டுகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

வெள்ளை மாளிகையில் இருந்து அவர் எத்தகைய சர்ச்சைக்குரிய பத்திரங்களை வெளியே கொண்டு சென்றார் என்பதை மறைக்க இரண்டாவது ஊழியர் ஒருவர் உதவினாரென அரசாங்கத் தரப்பு வழக்கறிஞர்கள் கூறினர்.

இரகசிய ஆவணங்கள் வைக்கப்பட்டிருந்த புளோரிடா வீட்டின் சிசிரிவி வீடியோக்க அழைத்து, சாட்சியங்களை அழித்ததாக ட்ரம்ப் மீது புதிய குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

ட்ரம்ப் மீது இதுவரை மொத்தம் 40 குற்றச்சாட்டுகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

புதிய குற்றச்சாட்டுகள் அறிவிக்கப்படுவதற்குச் சில மணி நேரத்துக்கு முன்பு தமது வழக்கறிஞர்கள் நீதித்துறை அதிகாரிகளைச் சந்தித்தனரென்று ட்ரம்ப் கூறினார்.

2020ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முடிவை மாற்ற முயற்சி செய்தது தொடர்பான விசாரணை அது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# மேற்கிந்தியத் தீவுகளை வீழ்த்தியது இந்திய அணி!



பார்படாஸ், ஜுலை 29

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் இந்திய அணி 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இரு அணிகள் இடையிலான முதல் ஒருநாள் போட்டி பிரிட்ஜ்டவுனில் உள்ள கென்சிங்டன் ஓவல் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் ரோஹித் களத்தடுப்பை முதலில் தெரிவு செய்தார்.

இதன்படி, முதலில் விளையாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 23 ஓவரில் 114 ஓட்டங்களுக்கு சுருண்டது. அந்த அணியில் ஷாய் ஹோப் ஓரளவு தாக்குப் பிடித்து 43 ஓட்டங்கள் எடுத்தார்.

மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க இந்தியா சார்பில் குல்தீப் யாதவ் 4 விக்கெட், ஜடேஜா 3 விக்கெட் வீழ்த்தி அசத்தினர்.

இதன்பின், 115 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி சில பரிசோதனைகளை செய்தது.

தொடக்க ஆட்டக்காரர் ஷூப்மன் கில் உடன் இஷான் கிஷன் இறங்கினார். கில் 7 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, அடுத்து வந்த சூர்யகுமார் யாதவ் 19 ஓட்டங்களிலும், பாண்ட்யா 5 ஓட்டங்களிலும் அடுத்தடுத்து விக்கெட்டை பறிகொடுத்தனர்.

எனினும், இஷான் கிஷன் பொறுப்புடன் ஆடி 46 பந்தில் ஒரு சிக்ஸர், 7 பௌண்ட்ரி உள்பட அரைச்சதமடித்து 52 ஓட்டங்கள் சேர்த்து நடையைக் கட்டினார்.

இதன்பின், ஷர்துல் தாகூர் பெரிதாக சோபிக்கவில்லை என்றாலும், ஜடேஜா - ரோஹித் இணைந்து அணியை வெற்றிபெற வைத்தனர். 7ஆவது வீரராக களமிறங்கிய ரோகித் கடைசி பௌண்ட்ரி அடித்து அணியை வெற்றிபெற வைத்தார்.

இறுதியில், இந்தியா 22.5 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 118 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. ஜடேஜா 16 ஓட்டங்கள், ரோஹித் சர்மா 12 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். இதன்மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இந்தியா 1-0 என முன்னிலை பெற்றுள்ளது. (ஐ)



மகளிர் உலகக் கிண்ணத் தொடர்

## ஆர்ஜென்ரீனா - தென்னாபிரிக்கா போட்டி சமநிலையில் முடிந்தது!

டுனிடின், ஜுலை 29

ஆர்ஜென்ரீனா - தென்னாபிரிக்க அணிகள் மோதிய போட்டி 2 - 2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. 9ஆவது உலகக் கிண்ண மகளிர் உதை பந்தாட்டப் போட்டி அவுஸ்திரேலியா, நியூசிலாந்தில் நடைபெற்று வருகிறது.

இதில் 32 நாடுகள் பங்கேற்றுள்ளன. அவை 8 பிரிவாக பிரிக்கப்பட்டு உள்ளது. நியூசிலாந்தில் உள்ள டுனிடினில் நேற்றுக் காலை நடந்த போட்டியில் "ஜி" பிரிவில் உள்ள ஆர்ஜென்ரீனா-தென்னாபிரிக்கா அணிகள் மோதின.

இந்தப் போட்டி 2-2 என்ற கோல் கணக்கில் சம நிலையில் முடிந்தது. ஆர்ஜென்ரீனா தரப்பில் சோபியா பிரான் (74ஆவது நிமிடம்), ரோமினா நுனாஸ் (79) ஆகியோரும், தென்னாபிரிக்கா தரப்பில் லிண்டா மொதாலோ (30ஆவது நிமிடம்), ககட்லனா (66) ஆகியோரும் கோல் அடித்தனர்.

2 கோல் பின்தங்கி இருந்த ஆர்ஜென்ரீனா பின்னர் 2 கோல்கள் அடித்து சமன் செய்தது. ஆர்ஜென்ரீனா முதல் போட்டியில் இத்தாலியிடம் 0-1 என்ற கணக்கில் தோற்றிருந்தது. இதே போல தென்னாபிரிக்கா 1-2 என்ற கோல் கணக்கில் சுவீடனிடம் தோற்றது.



## உலகக் கிண்ண உதைபந்து; போர்த்துக்கல் முதல் வெற்றி!

ஹமில்டன், ஜுலை 29

போர்த்துக்கல் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வியட்நாமை தோற்கடித்து முதல் வெற்றியை பெற்றது.

பெண்களுக்கான 9ஆவது உலகக் கிண்ண உதை பந்தாட்டம் ஆஸி., நியூசிலாந்தில் நடக்கிறது.

இதில், நேற்று முன்தினம் நடந்த 'பி' பிரிவு போட்டியில் போர்த்துக்கல், வியட்நாம் அணிகள் மோதின.

ஆட்டத்தில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய போர்த்துக்கல் அணி 2-0 என்ற கோல் கணக்கில் அறிமுக அணியான வியட்நாமை வென்றது. போர்த்துக்கல் அணியில் தெல்மா என்கர்னாகோ 7ஆவது நிமிடத்திலும், கிகா நசரத் 21ஆவது நிமிடத்திலும் கோல் போட்டனர்.

இரண்டாவது போட்டியில் ஆடிய அறிமுக அணியான போர்த்துக்கல் உலகக்கிண்ணப் போட்டியில் முதல் வெற்றியை சுவைத்ததுடன், அடுத்த சுற்று வாய்ப்பிலும் நீடிக்கிறது.

ஆஷஷ் இறுதி டெஸ்ட்:

## 283 ஓட்டங்களுக்கு சுருண்டது இங்கிலாந்து!



லண்டன், ஜுலை 29

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஷ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் 5ஆவது மற்றும் கடைசி போட்டியில் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 283 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

லண்டன் தி ஓவல் மைதானத்தில் நேற்று முன்தினம் தொடங்கிய இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்தது.

பென் டக்கெட் 41 ஓட்டங்களில் மிட்செல் மார்ஷ் பந்திலும், ஸாக் கிராவ்லி 22 ஓட்டங்களில் பட் கம்மின்ஸ் பந்திலும் வெளியேறினர். மொயின் அலி 34 ஓட்டங்களில் போல்ட் ஆனார்.

ஜோ ரூட் 5 ஓட்டங்களில் ஜோஷ் ஹேசில்வூட் பந்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். அதிரடியாக விளையாடிய ஹாரி புரூக் 91 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 11 பௌண்ட்ரிகளுடன் 85 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஸ்ரார்க் பந்தில் ஆட்டமிழந்தார். பென் ஸ்டோக்ஸ் 3 ஓட்டங்களிலும், ஜொன்னி பெயர்ஸ்ரோ 4 ஓட்டங்களிலும் போல்ட் ஆகினர். கிறிஸ் வோக்ஸ் 36, மார்க் வூட் 28, ஸ்ருவர்ட் பிரொட் 7 ஓட்டங்களில் நடையை கட்ட இங்கிலாந்து அணி 54.4 ஓவர்களில் 283 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

அவுஸ்திரேலிய அணி சார்பில் மிட்செல் ஸ்டார்க் 4 விக்கெட்களையும் ஜோஷ் ஹசில்வூட், டொட் மர்பி ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். இதையடுத்து அவுஸ்திரேலிய அணி துடுப்பாட்டத்தைத் தொடங்கியது. முதல் நாள் ஆட்ட நேர முடிவில் அவுஸ்திரேலிய அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 61 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

கவாஜா, 26 ஓட்டங்கள் மற்றும் லபுஷான் 2 ஓட்டங்கள் உடன் களத்தில் உள்ளனர். வோர்ணர் 24 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

## ரி - 20 உலகக் கிண்ணம் அயர்லாந்து அணி தகுதி!



எடின்பேர்க், ஜுலை 29

இருபது -20 உலகக் கிண்ணக் கிரிக்கெட்தொடர் 2024 ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்காவில் நடைபெறுகிறது. இந்த தொடருக்கான தகுதி சுற்று போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் ஐரோப்பிய நாடுகளுக்கான பிரிவில் அயர்லாந்து 9 புள்ளிகளுடன் இருபது - 20 உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெற்றுள்ளது.

எடின்பேர்க் நகரில் நேற்று முன்தினம் ஜெர்மனிக்கு எதிராக அயர்லாந்து விளையாடுவதாக இருந்தது. ஆனால், மழை காரணமாக இந்த போட்டி நடைபெறவில்லை.

தகுதி சுற்று தொடரில் அயர்லாந்து அணி இத்தாலி, டென்மார்க், ஆஸ்திரியா, ஜெர்சி ஆகிய அணிகளை வீழ்த்தியிருந்தது. தனது கடைசி போட்டியில் ஸ்கொட்லாந்துடன் மோதுகிறது. 8 புள்ளிகளுடன் உள்ள ஸ்காட்லாந்தும் இருபது - 20 உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெற்றுள்ளது. (ஐ)

# குடத்தனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் நூற்றாண்டு விழா



வடமராட்சி, ஜூலை 29

குடத்தனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் நூற்றாண்டு விழா பாடசாலை அதிபர் எஸ். ஜெயச்சந்திரன் தலைமையில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம் சார்ள்ஸ், சிறப்பு விருந்தினர்களான பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், முல்லைதீவு மேலதிக மாவட்ட செயலாளர் கே. கனகேஸ்வரன், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், வடமராட்சி கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன், மருதங்கேணி பிரதேச செயலர் கே. பிரபாகரமூர்த்தி ஆகியோரும்,

கௌரவ விருந்தினர்களாக மருதங்கேணி கோட்டக்கல்வி பணிப்பாளர் எஸ்.ஸ்ரீராமச்சந்திரன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், பாடசாலையின் முன்னாள் அதிபர் கே. குகநாதன், பாடசாலை ஸ்தாபகரின் உறவினர் திருமதி வாசுகி இராஜலிங்கம் மற்றும் மதத் தலைவர்கள் உள்ளிட்ட விருந்தினர்கள் மாலைகள் அணிவிக்கப்பட்டு பான்ட் வாத்திய அணிவகுப்புடன் பாடசாலைக்கு அழைத்து வரப்பட்டனர்.

அதனை தொடர்ந்து மங்கள விளக்கு ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகியது.

இறைவணக்கம், ஆசியுரை வரவேற்புரை, வரவேற்பு நடனம், நூற்றாண்டு மலர் வெளியீடு கலைநிகழ்வுகள் இடம்பெற்று விருந்தினர்கள் உரை என்பன இடம்பெற்றன. (அ-02)

# பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த முதியவர் மயங்கி விழுந்து சாவு!

வடமராட்சி, ஜூலை 29

வீட்டில் பூசை அறையில் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த வயோதிபர் ஒருவர் மயங்கி விழுந்து மரணம் அடைந்த சம்பவம் வடமராட்சியில் இடம்பெற்றுள்ளது.

வடமராட்சி - ஊறணி பகுதியைச் சேர்ந்த செல்வராசா செல்வமனோகரன் (வயது- 67) என்பவர் நேற்று முன்தினம் தினம் உயிரிழந்துள்ளார்.

அதிகாலை 5.30 மணியளவில் வீட்டு பூசை அறையில் பிரார்த்தனை ஈடுபட்டிருந்த போது அவர் மயங்கி சரிந்து விழுந்துள்ளார். அவரைப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியரால் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா இந்த மரணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

உடற் கூற்று பரிசோதனையில் மரணத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் அவரின் உடற்கூற்று மாதிரிகள் இரசாயனப் பகுப்பாய்விற்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ-02)

# திடீரென யாழ். வந்தார் புத்தசாசன அமைச்சர்!

## நெடுந்தீவுக்கும் சென்றார்





**யாழ்ப்பாணம், ஜூலை 29**

**புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகாரங்களுக்கான அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க யாழ்ப்பாணத்துக்கு தீடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.**

கடற்படையின் விசேட படகு மூலம் நெடுந்தீவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்பதற்காக அமைச்சர் வருகை தந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விஜயத்தின்போது நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற பாடசாலை நூலக அபிவிருத்தி மற்றும் மொழி இலக்கிய கலை மேம்பாட்டுத்திட்டத்தை அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க ஆரம்பித்து வைத்தார்.

யாழ்ப்பாணத்தில் மேலும் சில நிகழ்வுகளில் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

# பன்னங்கண்டியில் அறுவடை விழா



கிளிநொச்சி, ஜூலை 29

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான நீர் வழங்கும் குளங்களில் ஒன்றான இரணைமடு குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு அதற்கான அறுவடை விழா நேற்று முன் தினம் இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பன்னங்கண்டிப் பகுதியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள், நீர்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர்கள் கிளிநொச்சி கமநலசேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர்கள், கமக்கார அமைப்புகள், விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# உள்நாட்டு எரிவாயுக்களை ஒரே விலையில் விற்க முடிவு

கொழும்பு, ஜூலை 29

நாட்டிலுள்ள இரண்டு உள்நாட்டு எரிவாயு நிறுவனங்களும் ஒரே விலையில் எரிவாயுவை விற்பனை செய்வது தொடர்பிலான தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பிலான தீர்மானங்கள் அடுத்த வாரத்துக்குள் எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

அண்மைக் காலங்களில் வர்த்தக நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளபோதிலும் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் போது பெரும்பாலான பொருட்களின் விலைகளை குறிப்பிட்ட நிலையான மட்டத்தில் பராமரிக்க முடிந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.



அத்துடன், நாட்டிலுள்ள இரண்டு எரிவாயு இறக்குமதி நிறுவனங்களும் தமது விலை திருத்தத்தின் மூலம் நுகர்வோருக்கு பாரிய அநீதி இழைத்துள்ளன.

எனவே, இதனை கருத்திற்கொண்டு இரண்டு நிறுவனங்களின் எரிவாயுக்கான ஒரே விலை குறித்து தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாக அவர் கூறினார். (அ)

# அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஜனாதிபதியுடன் விசேட சந்திப்பு!

கொழும்பு, ஜூலை 29

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் புதிய அதிகாரிகள் குழு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் 2023-2024 ஆண்டுக்காக தெரிவு செய்யப்பட்ட புதிய அதிகாரிகள் குழுவினர் நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தனர்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் தர்ஷன சிறிசேன, செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே, உப தலைவர்களான வைத்தியர் சந்திக எபிடகடுவ, வைத்தியர் ஹேமந்த ராஜபக்ஷ, வைத்தியர் போதிக்க சமரசேகர, வைத்தியர் எஸ்.மதிவாணன் உள்ளிட்ட புதிய அதிகாரிகள் குழுவினர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சந்தைப் பெறுமதி மற்றும் செயற்திறனை அடிப்படையாக கொண்ட சம்பளக் கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்தல், புத்திஜீவிகள் வெளியேற்றத்தை மட்டுப்பத்தல் மற்றும் வைத்தியர்களுக்கான கொடுப்பனவுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதிக்கு மேற்படி அதிகாரிகளால் விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், அது தொடர்பிலான பரிந்துரைகளும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

நாட்டின் சுகாதார துறையில் மேற்கொள்ளப்படவேண்டிய உடனடி மறுசீரமைப்புக்கள் குறித்து இங்கு தெளிவுபடுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அது தொடர்பாக ஆலோசனைகளை முன்வைக்குமாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்திடம் கேட்டுக்கொண்டார்.

குறுகிய கால மற்றும் இடைக்கால திட்டங்களின் ஊடாக புதிய மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அத்திட்டங்களை வகுக்கும் போது, ஸ்கன்டிநேவியா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் முன்னேற்றகரமான சுகாதார கட்டமைப்பு தொடர்பாக ஆராய வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## செயன்முறை...

அட்டைகள் பாடசாலை அதிபருக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் அவரவரின் தனிப்பட்ட முகவரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

## சர்வதேச...

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் அழைப்பின் பேரில் பொது முடக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. அத்துடன், முல் லைத்தீவில் கவனவீர்ப்பு பேரணி ஒன் றும் முன்னெ டுக்கப்பட்டது. இந்தப் பேரணியின் நிறைவில் அந்த சங்கம் விடுத்த அறிக் கையிலேயே இந்த விட யம் தெரிவிக் கப்பட்டது.

அந்த அறிக்கையில், தமிழர் தாயகத்தில் காணப்படும் மனிதப்புதைகுழிகளின் அகழ்வுப் பணிகள் சர்வதேச நியமத்தின் அடிப் படையிலும், சர்வதேச கண்காணிப்பின் ஊடாகவும் மேற்கொள்ளப்படவேண்டும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பான சர்வதேச விசாரணைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படுவதுடன், அவர்களுக்கு சர்வதேச நீதி வழங்கப்பட வேண்டும்.

தமிழின அழிப்பை மேற்கொண்ட, எமது உறவுகளை காணாமல் ஆக்கிய சிங்கள இராணுவமானது தமிழர் தாயகம் எங்கும் நிலைகொண்டுள்ளது. இந்த இராணுவமானது தமிழர் தாயகத்தில் 1983ஆம் ஆண்டிற்கு முற்பட்ட அளவிற்கு குறைக்கப்பட்டு முகாம்களுக்குள் முடக்கப்பட வேண்டும். அவர்கள் வலிந்து பறித்த தமிழர் நிலங்கள் மீள கையளிக்கப்பட வேண்டும்.

சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் எவ்வித நிபந்தனைகளுமின்றி உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

காலங்காலமாக நடைபெற்று வரும் தமிழின அழிப்பிற்கு சர்வதேச நீதி பொறிமுறை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், சர்வதேச நீதிமன்றம் ஊடாக நீதி வழங்கப்படவேண்டும்.

அரச இயந்திரங்களான தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், வனப் பாதுகாப்பு திணைக்களம், நிலவள திணைக்களம் மற்றும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபை ஊடாக பௌத்த மயமாக்கல், திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை சிறிலங்கா அரசாங்கமானது முனைப்போடு நடைமுறைப்படுத்தி வருகிறது. வட- கிழக்கில் உள்ள சுமார் 200 இற்கும் மேற்பட்ட தொன்மை வாய்ந்த தமிழ் ஆலயங்களை கையகப்படுத்துவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகிறது. அத்துடன் தமிழர் தாயகம் எங்கிலும் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டும், அமைக்கப்படுவதிற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றது. இவ்வாறான நில அபகரிப்புகளும், பௌத்த சிங்கள மயமாக்கல்களும் உடனடியாக நிறுத்தப்பட்டு காணிகள் மீள கையளிக்கப்பட வேண்டும்.

மனித உரிமை மீறல்களை வெளிக்கொண்டு வரும் ஊடகவியலாளர்கள் மீதும், இன அடக்குமுறைக்கு எதிராக போராட்டங்களை முன்னெ டுத்து வரும் வலிந்து காணாமல் ஆக்கப் படவர்களன் உறவுகள், மாணவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் அச்சுறுத்தப்படுவதுடன் அவர்கள் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். இது அவர்களின் பேச்சுரிமை, நடமாடும் சுதந்திரம் மற்றும் அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகும். அத்துடன் தமிழர் தரப்பில் உருவாகும் விடுதலைக்கான தன்னெழுச்சியான அரசியல் வெளியினை ஒடுக்குவதில் சிங்கள பௌத்த பேரினவாத அரசு குறியாகவே உள்ளது. இவ்வாறான அடக்குமுறைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.என 7 அம்ச விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

## காலதாமதம்...

தோடு மேலதிக அகழ்வு பணிகள் முன்னெடுக்கபட வேண்டும் ஐ. நா. சபை இனியும் காலதாமதம் செய்யக் கூடாது - என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளர் க. சுகாஷ் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் பின்னர் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு,

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிக்கு நீதி கோரியும் காலதாமதம் இல்லாமல் ஈழத்தில் அரங்கேறிய இனப்படுகொலைக்கு நீதிகோரியும் மாபெரும் பேரணி நடைபெற்றது. இவ்வளவு காலமும் தமிழர் பகுதிகளில் பல புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட் டன. ஆனால், இன்று வரைக்கும் எந்தவொரு புதைகுழிக்கும் நீதி கிடைக்கவில்லை.

ஆனால், கொக்குத்தொடுவாயும் அந்த விடயம் அரங்கேறிவிடக்கூடாது என்பதற்காக தமிழர் தாயகத்தில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகிறது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் அழைப்பின்பேரில் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டிருக்கின்றோம். இதுதான் தமிழ் மக்களின் உணர்வு. இது தான் எங்கள் அபிலாசை. ஆகவே, இனியும் தாமதிக்காமல் உடனடியாக சர்வதேச விசாரணையை நடத்துவதோடு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரம் தொடர்பில் சர்வதேச தராதரங்களுக்கு அமைவாக சர்வதேசத்தின் நிபுணத்துவத்தோடு மேலதிக அகழ்வு பணிகள் முன்னெ டுக்கபட வேண்டும் ஐ. நா. சபை இனியும் காலதாமதம் செய்யக்கூடாது - என்றார். (ஐ)

## மாகாணங்...

அத்துடன், அபிவிருத்திக்கான அதிகாரப் பகிர்வுக்கு முழுமையான ஆதரவை வழங்க நாம் தயாராகவுள்ளோம். அரசாங்கம் இது தொடர்பில் தனது உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் என்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயா சிறிஜய சேரக தெரிவித்துள்ளார்.

13ஆவது அரசியலமைப்பு திருத்தம் இந்தியாவால் பலவந்தமாக திணிக்கப்பட்டதாகும். எனினும், இந்தியாவுடன் தற்போது காணப்படும் இராஜதந்திர தொடர்புகள் காரணமாக எம்மால் அதனை உதாசீனப்படுத்த முடியாது.

எனவே, அபிவிருத்திக்கான அதிகார பகிர்வுக்கு முழுமையான ஆதரவை வழங்க நாம் தயாராகவுள்ளோம். பொலிஸ், காணி அதிகாரங்களுடன் 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தினால் அது தென்னிலங்கை மக்கள் மத்தியில் அச்சத்தை உண்டாக்கும். எனவே, இது மக்கள் மத்தியில் மீண்டும் இன மோதல்கள் ஏற்பட வழிவகுக்கும்.

பொலிஸ் அதிகாரம் தொடர்பில் அரசாங்கமும் எந்த நிலைப்பாட்டையும் தெரிவிக்கவில்லை. நாமும் அது குறித்து பேசவில்லை. இது தொடர்பில் முதலில் அரசாங்கத்தின் முன்மொழிவே அவசியமாகும். சர்வகட்சி மாநாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் சி. வி. விக்னேஸ்வரனால் மாகாண சபைகளில் ஆயுதங்கள் அற்ற பொலிஸ் சேவையை வழங்குமாறு யோசனையொன்று முன்வைக்கப்பட்டது.

இதனைப் போன்ற யோசனைகளை அரசாங்கமே முன்வைக்க வேண்டும். அரசாங்கத்தினால் இதற்கான வேலைத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டால், அதற்கு எந்தளவுக்கு ஒத்துழைப்புகளை வழங்க முடியும் என்று நாம் கட்சி ரீதியாக கலந்தாலோசித்து தீர்மானம் எடுப்போம்.

எவ்வாறிருப்பினும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசியல் ரீதியாக பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படக் கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும். முதலமைச்சர்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதால் ஏற்படக் கூடிய விளைவுகளை வரலாற்று சம்பவங் கள் ஊடாக நன்கு அறிந்திருக்கின்றோம்.

எனவே, மாகாண முதலமைச்சர்களுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவதை நாம் முற்றாக எதிர்க்கின்றோம் - என்றும் கூறினார். (ஐ)

## நீதி கோரி...

ஆர்ப்பாட்டத்திலும் பங்கேற்றவர்கள் "சர்வதேசமே எமக்காக குரல் கொடு", "செம்மணியில் அன்று கிரி சாந்தியை புதைத்தார்கள், அன்று தொடர்ந்த புதைகுழிகள்... தற்போது, கொக்குத் தொடுாய் புதைகுழி முன்வந்து நிற்கின்றோம்...", "சர்வதேச விசார ணையை எமக்கு வேண்டும்", "குருந்தூர்மலை மீதான ஆக்கிரமிப்பை நிறுத்து", "காணி அபகரிப்புகளை நிறுத்து", போராடி போன்ற பல கோஷங்களை முன்வைத்தனர்.

இந்தப் பேரணியிலும் போராட்டத்திலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தனியார் போக்குவரத்து சங்கங்கள், வர்த்தக சங்கங்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் அரசியல்வாதிகள் பெருந்திரளான பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## இலங்கையின்...

என்று பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விடயத்தில் நீதி கோரி நேற்று முல்லைத்தீவில் நடந்த பேரணி மற்றும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற பின்னரே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு தமிழ் தேசிய மண்ணிலே பல்வேறுபட்ட இடங்களில் மனித புதைகுழிகள் இன்றும் அடையாளம் காணப்பட்டுள்ளன. அந்த மனித புதைகுழிகள் வெளியில் வருமானால் இலங்கை இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் படைகள் கேள்விக்கு உட்படுத்தப்படுவார்கள்.

இலங்கை அரசாங்கம் என்பது உண்மையில் நீதியாக நடப்பதில்லை. தமிழ் நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினால் கூட அதனை பிழை என கூறும் இலங்கையின் அரசியல் தலைவர்கள் இருக்கும் வரை இலங்கையின் நீதித்துறை சரியாக செயல்படுமா? இவர்களால் நீதியான செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுமா ? என்பது கேள்விக்குறியே.

அதனால்தான் செம்மணி மனித புதைகுழியிலிருந்து மண்டைதீவு மனித புதைகுழி மற்றும் கொக்குதொடுவாயில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி, மன்னாரில் இருக்கும் மனித புதைகுழி எனப் பல இடங்களிலும் மனித புதைகுழிகள் தோண்ட தோண்ட தமிழர்களாக வந்து கொண்டிருப்பதுதான் மிகப்பெரிய அநியாயம். இந்த அநியாயங்களுக்கு நீதி என்பது இலங்கையிலே கிடைக்காது அதனால் தான் இந்த சர்வதேச நீதி விசாரணையை கோருகிறோம் - என்றார். (ஐ)

## அகழ்வுக்கு...

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கு நான் கொண்டு வந்தேன். அதனைத் தொடர்ந்து அவர் குறித்த அகழ்வு பணிகளுக்கு நிதி ஒதுக்குவதாக தெரிவித்தார்.

மனித புதைகுழியின் அகழ்வு பணிகளில் இலங்கை தொல்பொருள் திணைக்களம் ஈடுபட்டால் அது பக்க சார்பானதாக அமையும் என தமிழ் மக்கள் நம்புகிறார்கள். எனவே, ஐ. நா. அனுசரணையில் இதனை முன்னெடுக்க வேண்டும் எனவும் நான் வலியுறுத்தினேன்.

எனது கோரிக்கை தொடர்பில் அவர் பதிலளிக்கவில்லை எனினும் குறித்த அகழ்வு பணிகளுக்கு நிதி ஒதுக்குவதாக தெரிவித்தார். இதன் போது அகழ்வு பணி தொடர்பில் முறையான சட்ட ரீதியான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என தான் ஜனாதிபதியிடம் வலியுறுத்தினார் என்றும் கூறினார்.

## வடக்கில்...

வணிகர் கழகங்கள் மற்றும் பொது அமைப்புகள் ஆதரவு வழங்கியிருந்தன.

இந்த அழைப்பை ஏற்று வடக்கு மாகாணத்தின் முக்கிய நகரங்கள் அனைத்திலும் வணிக நிலையங்கள் அடைக்கப்பட்டன. மாணவர்கள் பாடசாலைக்கு செல்லாததால் அவை இயங்கவில்லை. தனியார் போக்கு வரத்து சேவை முழுமையாகப் பாதிக்கப்பட்டது.

இதனால், வடக்கு மாகாணத்தில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்கள் முழுமையாக இயல்பு நிலை பாதிக்கப்பட்டன.

எனினும், கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் வாழும் பகுதிகளே ஓரளவுக்கு இயல்பு நிலையை இழந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சர்வதேசத்தின்...

நேரடியாகத் தலையிடவேண்டும் என முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைரசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முல்லைத்தீவில் நடந்த போராட்டத்தின் பின்னர் அவர் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், சர்வதேச நியமத்தின் அடிப்படையில் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுகள் இடம்பெறவேண்டும் என்பதுடன், சர்வதேசக் கண்காணிப்பில் இந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்பது எமது நிலைப்பாடாகவிருக்கின்றது.

இந் நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும், பொறுப்புக்கூறல் விடயத்திலே அரசாங்கத்துக்கு சர்வதேசம் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும், தமிழ் மக்களின் அபகரிக்கப்பட்டுள்ள காணிகள் விடுவிக்கப்படவேண்டும், அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து வட, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவுகள் மாபெரும் கவனவீர்ப்பை நடாத்தியிருக்கின்றனர்.

தமிழர்களின்மீது மாற்றான்தாய் மனப்பான்மையுடன் செயல்படும் இலங்கை அரசிற்கு எமது கடுமையான கண்டனங்களைத் தெரிவிக்கின்றோம் - என்றார். (ஐ)

## மக்களுக்கான...

மேன்முறையீடுகள் கோரப்பட்டு, தரவுகள் மீளாய்வு செய்யப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களுக்கு கொடுப்பனவுக்கான கடிதங்கள் வழங்கப்படுகின்றன.

பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட கடிதத்தில், பயனாளிகளின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள 4 அரச வங்கிகளில் ஒன்றில் சமர்ப்பித்து கணக்கை ஆரம்பிக்க முடியும். இந்த செயல் திட்டத்தால் இந்நாட்களில் பிரதேச செயலகங்களிலும் அரச வங்கிகளிலும் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர்.

இந்நிலையில், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைகள் சங்கம் நேற்று செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தியது.

அதில், ஜூலை மாதத்துக்கான கொடுப்பனவு பணம் மற்றும் அதற்கான வட்டிக்கு என்ன நடந்தது என்பதை அரசாங்கம் அறிவிக்க வேண்டும். ஜூலை மாதம் முதல் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என அரசாங்கம் கூறியிருந்தாலும் அது வழங்கப்படவில்லை.

அவ்வாறு 20 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்கப்படவிருந்த ஆயிரத்து 708 கோடியே 90 இலட்சம் ரூபாய் நிவாரணத் தொகைக்கும் அதன் வட்டிக்கும் என்ன நடந்தது என சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகள் சங்கத்தின் பிரதம செயலாளர் சாமர மத்துமகிலுகே கேள்வி எழுப்பினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# மாகாண சபை தேர்தல் வேண்டாமென ரணிலிடம் கூறினார் விக்னேஸ்வரன்!

## சுமந்திரன் எம்.பி. தகவல்



யாழ்ப்பாணம், ஜுலை 29

**மாகாண சபைத் தேர்தல் தேவையில்லை என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் ஜனாதிபதியிடம் கூறினார் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

**யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதி செயலகத்தில் அதிகாரப் பகிர்வு சம்பந்தமாக உரையாடுவதற்கு என்று கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

அந்த கூட்டத்தில் தலைவர் இரா.சம்பந்தன், புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கல நாதன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டார்கள். அந்த கூட்டத்தில் நானும் கலந்துகொண்டிருந்தேன்.

இந்தக் கூட்டத்தில் அதிகாரப் பகிர்வு என்று பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த 13 ஆம் திருத்தத்தை அமுல் படுத்துவது பற்றி அவர் பேசியிருந்தார்.

இதன்போது நான் "தற்போது கொண்டு வந்திருக்கின்ற தனிநபர் சட்டமூலத்திற்கு அமைவாக மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும் எனச் சுட்டிக்காட்டினேன்.

எனினும் தேர்தல் இப்போது தேவையில்லை. அதிகாரப் பகிர்வு எப்படி இருக்கவேண்டும் என்று நாங்கள் பேசுவோம் என ஜனாதிபதி தெரிவித்தார்.

நீங்கள் இந்த இரண்டில் ஒன்றைத்தான் தேர்ந்தெடுக்க முடியும் ஒன்று தேர்தல் அல்லது அதிகாரங்கள் பகிர்வது. இரண்டையும் ஒரே நேரத்தில் கேட்க முடியாது என அவர் திட்டவட்டமாகக் கூறினார்.

இது ஒரு முரண்பட்ட கருத்து. இரண்டும் ஒரே திசையில் தான் இருக்கிறது. அப்படி இருக்கின்ற போது நீங்கள் ஏன் ஒன்று மட்டும் தான் கேட்கவேண்டும் எனச் சொல்கிறீர்கள் என்று நான் அவரோடு வாக்குவாதப்பட்ட போது முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் சொன்னார், தேர்தல் தேவையில்லை, அதிகாரப் பகிர்வு பற்றி பேசுவது தான் முக்கியம் என்று.

அந்தக் கருத்தோடு நாங்கள் உடன்படவில்லை. மூன்று கட்சித் தலைவர்களும் அங்கே இருக்கின்ற போது அவர்களின் அனுமதியோடு நான் விக்னேஸ்வரன் ஐயா சொன்னதை மறுத்துரைத்தேன்.

பல வருடங்களாக கால தாமதமாகி இருக்கிறது மாகாண சபைத் தேர்தல். ஆகவே அது உடன் நடத்தப்பட வேண்டும். தேர்தல் நடத்துவதால் அதிகாரப்பகிர்வு சம்பந்தமாக கதைக்கக்கூடாது என்று எங்கேயும் இல்லை. ஆகவே ஜனாதிபதி தர்க்க ரீதியாக ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு கருத்தை சொல்லிக் கொண்டிருக்கிறார்.

நாங்கள் இரண்டையும் கேட்கின்றோம் எனக் கூறியபோது "அப்படியானால் நாங்கள் கூட்டத்தை முடித்துக் கொள்வோம்" எனக் கூறிவிட்டு ஜனாதிபதி சென்றுவிட்டார். ஆகவே கூட்டம் அரைகுறையுடன் நிறைவடைந்திருக்கிறது - என்றார். (அ)

# 2024 ஆண்டு முதலாம் தவணை பெப்ரவரி 21ஆம் திகதி ஆரம்பம்



கொழும்பு, ஜுலை 29

அடுத்த ஆண்டுக்கான முதலாம் தவணை கல்வி நடவடிக்கை பெப்ரவரி 21 ஆம் திகதி ஆரம்பமாகும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

தற்சமயம் ஆரம்பமாகியுள்ள அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசலைகளின் இரண்டாம் தவணையின் முதல் கட்டம் ஒகஸ்ட் 17 ஆம் திகதி வரை தொடரும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒகஸ்ட் 18 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 27 ஆம் திகதி வரை ஒரு வாரத்திற்கு மட்டுமே பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இரண்டாம் கட்டப் பாடசாலை தவணை ஒகஸ்ட் 28 ஆம் திகதி தொடங்கி ஒக்ரோபர் 27 ஆம் திகதி வரை நடைபெறுமென்றும், மூன்றாவது பாடசாலை தவணை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சுற்றுலா சென்றுவிட்டுத் திரும்பிய யாழ்.பெண் சென்னையில் மரணம்!

சென்னை, ஜுலை 29

யாழ்ப்பாணத்திற்கு வருவதற்காக சென்னை பன்னாட்டு விமான நிலையத்துக்குச் சென்றிருந்த பெண் ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

அவருடைய பெயர் சிவசுகந்தி (வயது 43) என்று விமான நிலையத் தகவல்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்திலிருந்து சுற்றுலா சென்று திரும்பும் போதே அவர் உயிரிழந்திருப்பதாகவும் அவர் திருமணமாகாதவர் என்றும் முதற்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்த பெண்ணின் சடலம் விமான நிலையப் பொலிஸாரின் உதவியுடன் நோயாளர் காவுவண்டியில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

மேலதிக விசாரணைகளை விமான நிலையப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# கொழும்பின் சில பகுதிகளில் போராட்டங்கள் நடத்த தடை!

கொழும்பு, ஜுலை 29

நேற்றுக் காலை 10.30 மணி முதல் இன்று முற்பகல் 10.00 மணி வரை கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தை மையமாகக் கொண்டு கொழும்பு தேசிய வைத்தியசாலை சதுக்கம் உட்பட 10 இடங்களுக்கு அருகாமையில் 9 தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் சமூக ஆர்வலர்கள் போராட்டம் நடத்துவதற்கு தடை விதித்து மாளிகாகந்தை நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

துமிந்த நாகமுவ, ரொஷேன் சமீர, தம்பிட்டியே சுகதானந்த தேரர், ஜகத் தம்மிக்க முனசிங்க, தன்னே ஞானானந்த தேரர், ஜே.பி.குருசிங்க, சிந்தக ராஜபக்ஷ, நயன ரஞ்சனி, நிலான் பெர்னாண்டோ, லஹிரு சதுரங்க வீரசேகர மற்றும் விதர்ஷன கன்னங்க ஆகியோருக்கு இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபம், அவசர சிகிச்சைப் பிரிவு, கண் வைத்தியசாலை மற்றும் தேசிய வைத்தியசாலை சதுக்கம், சுகாதார அமைச்சு, விபத்துப் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, சுகாதார அமைச்சு மற்றும் டீன்ஸ் வீதியைச் சுற்றியுள்ள வீதிகள் மற்றும் நடைபாதைகள், கின்ஸ்லி வீதி ஆகிய பகுதிகளில் போராட்டங்களை தடை செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த போராட்டங்கள் தொடர்பில் மருதானை பொலிஸார் நீதிமன்றில் முன்வைத்த வாக்குமூலத்தை கருத்திற்கொண்டே நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (அ)

# தமிழரின் வாக்குகளை இலக்கு வைத்தே சர்வகட்சி மாநாட்டை நடத்தினார் ரணில்

## சுட்டிக்காட்டுகின்றது ஜே.வி.பி

கொழும்பு, ஜுலை 29

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் மற்றும் இந்தியாவின் உதவியை இலக்கு வைத்தே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சர்வக்கட்சி மாநாட்டை நடத்தியதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடத்திய சர்வ கட்சி மாநாடு தெளிவாக ஒரு புஷ்வாணம். இது மீண்டும், மீண்டும் நாட்டு மக்களை ஏமாற்றும் நடவடிக்கை.

ஜனாதிபதி கூட்டிய சர்வக்கட்சி மாநாடு என்பது இதற்கு முன்னர் நடத்தப்பட்ட மாநாடுகளை போன்று எந்த பிரயோசனமும் இல்லாத மாநாடு. இதனை அறிந்த மக்கள் விடுதலை முன்னணி அதில் பங்கேற்கவில்லை.

தமிழ் மக்கள் மற்றும் இந்தியாவின் உதவியை பெற்றுக்கொள்வதை தவிர உண்மையில் நாட்டில் அதிகாரத்தை பரவலாக்குவதோ, 13ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதே என்ற தெளிவான ஜனநாயக நோக்கம் ஜனாதிபதிக்கு இல்லை.

தனி மனிதனுக்கு சட்டங்களை உருவாக்கும் அதிகாரம் இல்லை என்று ஜனாதிபதி கூறிய போதிலும் தனி மனிதனுக்கு நாட்டின் வளங்களை விற்பனை செய்வதற்கு தேவையான சட்டங்களை கொண்டு வரும் அதிகாரம் இருக்கின்றது. நாட்டின் பிரதான பிரச்னைகளுக்கு தீர்வுகாண எவ் வித அதிகாரங்களும் இல்லை என கூறுவது நகைப்புக்குரிய விடயம்.

குறிப்பாக இதன் பின்னர் சர்வக்கட்சி மாநாடு கூட்டப்படுமாயின் முதலில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்பதை எதிர்க்கட்சிகளுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

இதன் பின்னர் எதிர்க்கட்சிகள் தமது நிலைப்பாடுகளை முன்வைக்க முடியும் - என்றார். (அ)

# காணி கோரும் உண்ணாவிரதம் இரு வாரங்களுக்கு ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, ஜுலை 29

வனப் பாதுகாப்பு திணைக்களத்தினால் ஆக்கிரமிக் கப்பட்ட காணிகளை விடுவிக்கக் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுப்பட்டிருந்தவர்கள் போராட்டத்தை இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைத்துள்ளனர்.

வனவளத் திணைக்களத்தினால் ஆக்கிரமிக்கப்பட் டுள்ள தமது காணிகளை விடுவிக்கக் கோரி, முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு, பரந்தன் வீதியின் கைவேலிப் பகுதியில் கடந்த ஜுலை 24ஆம் திகதி முதல் நான்கு முன்னாள் போராளிகளின் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்நிலையில், போராட்டக்காரர்களுடன் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலாளர், நில அளவை திணைக்கள அதிகாரிகள், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக காணி உத்தியோகத்தர்கள் மற்றும் வன திணைக் கள அதிகாரிகள் நேரில் சென்று கலந்துரையாடினர்.

மேலும் குறித்த காணிகளையும் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

"வனவளப் பாதுகாப்பு திணைக்களத்தினால் தற் போது ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணி திணைக்களத்திற்கு சொந்தமான காணியல்ல என கண்டறியப்பட்டுள் ளது. அந்த காணிகளை விடுவிப்பதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள சிறிது காலம் தேவைப்படும்.

எனவே, உண்ணாவிரதப் போராட்டக்காரர்களுக்கு திருப்திகரமான முடிவை வழங்க இரண்டு வாரகால அவ காசம் அளிக்க வேண்டும்" என்று முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலாளர் கனகேஸ்வரன் கோரிக்கை விடுத்தார்.

இதனை தொடர்ந்து உண்ணாவிரதப் போராட்டத்தை இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைப்பதாக போராட்டக் காரர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.07.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.